# தென்மொழி

## தமிழ்நாட்டு ஆட்சி!

கள்ளச்சா ராயம் விற்கும்
கயவரைக் கைக்குள் போட்டு,
நொள்ளைத் திரைப்ப டத்துத்
தொழும்பர்க்குச் சலுகை காட்டி,
வெள்ளையாய்க் கொஞ்சம், அட்டக்
கறுப்பினில் வயிறு மிஞ்சக்
கொள்ளைய டிப்பார் செய்யும்
கூத்துக்கே ஆட்சி—என்பார்!

தொழு(து) உதை காலில் வீழ்ந்தால்
முதல்வர் கை தோள்மேல் வீழும்!
விழுதையும் மரம் என் பார்கள்,
மாண்புகள், விருந்து போட்டால்!
பழுதையும் பரிசு வாங்கும்
பரிந்துரை முதல்வர் செய்தால்!
கழுதையும் 'டாக்டர்' ஆகும்
ஆளுநர் கடைக்கண் வைத்தால்!

மருள்மன மக்கள் தம்மை
மயக்கிடும் தலைவர் கூட்டம்!
இருள் பொதி விழா வே டிக்கை!
ஏமாற்றும் சட்ட திட்டம்!
உருள்கின்ற பதவிச் சண்டை!
ஒவ்வொரு நாளும் கோடிப்
பொருள்தரும் சுரண்டல் செல்வர்!
புரிந்ததா? தமிழ்நாட் டாட்சி!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 9

விலை:
உருபா: 3-00

Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

ப : 1508 : அன்பார்ந்த பாவலர் ஐயா அவர்கட்கு, வணக்கம். தென்மொழியில் வெளியான 'மெய்ப்பொருள் உரை'க்கு எம் திருக்குறள் இலக்கியப் பேரா. முனைவர் சாரங்கபாணி அவர்களின் கருத்துகள் பெற்று அனுப்பியுள்ளேன். பிற அடுத்த கடிதத்தில்.

தமிழாகரர், பேரா. முனைவர் ஆறு. அழகப்பனார்.
தமிழியல் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

தமிழ் முறைக்கேற்ப அதிகார முன்னுரையும் விளக்கக் குறிப்புகளும் அமைந்துள்ளன. சொற் பொருளும் சில சொற்களுக்குத் தரும் நயமான தெளிவுரைகளும் சிறப்பாக உள்ளன. இடும்பை—மனத்துயரம்; நல்குதல்—பெற்றதைத் திரும்பத் தருதல்; நெடுங்கடல்—பார்த்தற்கும், கடத்தற்கும், அளத்தற்கும் அரிய நீடிய கடல் எனத் தரும் பொருள்கள் பொருத்தமாக உள்ளன. 'கடல் நீர்மை குன்றுதல்' என்பதற்கு விளக்கமாக, 'நீர் அளவிலும் நீர்மையிலும் அஃதாவது தன் இயல்பாம் தன்மையிலும் குறைவுபடுதல். இயல்பாம் தன்மை—தானும் தன்னுள் வாழும் பயிரும் உயிரும் கனியும் மணியும் அளவிற் குறைதல்' என விளக்கந் தருதல் நயமாக உள்ளது.


''வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லாது'' என்றவிடத்து, வானோர் என்பதற்கு, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புற மக்கள் மனங்களில் தெய்வங்களாக நின்று கொண்டாடப் பெறுவோர்' எனக் கூறும் புதுப் பொருளும் ஏற்கத் தகுவதே. அதற்கு ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' (50) என்னும் குறளை மேற்கோள் காட்டியிருப்பதும் பொருத்தமுடையது. 'மழை பொழியாது வானம் வறக்குமேல் தெய்வங்கள் மேற்கொண்ட நம்பிக்கை தளருமாதலின், அவற்றைப் பாராட்டி எடுக்கும் பூசனைகளும் விழாக்களும் நிகழ்த்தப் பெறா' எனக்காட்டும் விளக்கம் நன்று.

''வாரி வளங்குன்றிக்கால்'' என்ற விடத்து வாரி—கொடை என்று பொருள் கொள்ளப்படுகிறது. சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் வருவாய், என்னும் பொருளில் வருவதால், அப்பொருளே இங்கு சிறப்புடையதாகும். 'தடிந்தெழிலி' என்பதனைத் தடிந்த எழிலி எனப்பிரித்துப் பெயரெச்சம் விகாரத்தால் தொக்கது எனக் கொள்வதினும், தடிந்து என வினையெச்சமாகக் கொள்ளுதல் இயல்பாகும்.

அமிழ்தம்—மூலப்பால். இஃது அம்மம்—அம்மு—அமுது—அமுதம்—அமிழ்தம் என வந்ததாகக் காட்டுவர். அவிழ்—அவிழ்து—அமிழ்து—சோறு எனப் பாரதிதாசன், பாவாணர் போன்றோர் விளக்கம் சொல்வர். புலவர் குழந்தை பாற்சோறு என்று பொருளுரைப்பர். அமிழ்தத்தை வானோர் உணவாக, 'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்' (புறம்) சங்க இலக்கியம்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல் துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால் எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி.பி. 1990 (1959) ]



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26] தி.பி. உ0உ௩ — துலை (செப்-நவ 92) (ஓலை: 9]

## தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி-10



எஃது எவ்வாறிருந்தாலும், அறிஞர் அருளி அவர்களின் 'அயற்சொல் அகராதி' இன்றைய நிலையில், தமிழுக்கு மிக மிகத் தேவையான நூல். தமிழ், வேறு மொழிகளின் பிடிப்புகளிலிருந்து, குறிப்பாக, சமசுக்கிருதத்தின் குரல்வளைப் பிடியிலிருந்து, தன்னை மீட்டெடுத்துக் கொள்ள முயற்சி செய்யும் காலகட்டம் இது. கழகக் காலத்தின் இறுதி நிலையில் தோன்றிய தமிழ்மொழிக் கலப்பு நிலை படிப்படியாக அரசியல், வாழ்வியல், மொழியியல், மதவியல் தாக்கங்களினால் மிகவும் கேடடைந்து போன நிலையில், தூய தமிழியக்கம் தோன்றிச் சிறிது சிறிதாக வலுப்பெற்றுக் கொண்டு வருகின்ற நேரம் இது; இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சமசுக்கிருத அடிவருடிகளும், பொறுக்கித் தின்னி அரசியல்காரர்களும், பச்சைப் பார்ப்பனப் பகைவர்களும்

தனித்தமிழ் ஆக்கத்தைப் பலவகையிலும் பகடி செய்தும், குறை கூறியும், கண்டித்தும், சரமாரியாக சொல் மாரி பொழிந்தும் வரும் நிலை ஒன்றே தமிழ்மொழியின் தாய்மைப்படுத்தும் முயற்சி ஓரளவு வெற்றி பெற்று வருகின்றது என்பதற்கான தலையாய சான்றாகும்.

அரசியல் அதிகாரம் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், தமிழுக்குழைப்பதாகப் பறைசாற்றித் திரியும் கலைஞரும், தூய தமிழ் முயற்சிக்குச் சிறிதளவு துணை நின்றிருந்தாலும், இன்னும் ஆக்க முழுமையான தூய தமிழ்ப் பணிகள் எத்தனையோ நடந்திருக்கும். ஆனால் கலைஞர் அவர்கள் வாய்தான் சர்க்கரையே தவிர, கை தொக்கரை. வெளிப்படையாக, உண்மையாக, நடுவுநிலை தவறாமல் சொல்வதானால் அவர் தம் குடும்பத்திற்கு உழைத்த அளவில், பத்தில் ஒரு, பங்குக் கூட தமிழுக்கு உழைக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இக் கூற்றை அவரால், தம் திறமையாலோ, தமிழறிவினாலோ அல்லாமல், அவரை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை, தங்களின் தன்மானத்தையும் மொழி இன மானத்தையும் கூட கருதாமல், வானளாவப் புகழ்ந்துப் பேசிப் பேசியே. பலஅரசியல், பொருளியல் நலன்களைப் பெற்றவர்களும், பெற்றுக்கொண்டு வருபவர்களும் தவிர, வேறு எவருமே மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது.

இக் கூற்றுக்குச் சான்றாக, ஒரு சில நிகழ்ச்சிகளை இங்கு அன்பர்களின் முன்னும், எதிர்கால வரலாற்றின் முன்னும் வைக்க விரும்புகிறோம்.

கலைஞர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த காலத்தில், மொழி ஞாயிறு பாவாணரைச், 'செந்தமிழ்ச்சொற்பிறப்பியல்அகராதி'-யின் ஆக்கத்திற்கு உதவும்படி, பல வகையான வேண்டுகோள்களைத் தென்மொழி வாயிலாகவும் நேரிடையாகவும் முன்வைத்து வலியுறுத்தினோம். ஆனால் அவரின் மரச்செவியில் அவ்வேண்டுகோள்கள் ஏறவேயில்லை. அதன் பின்னரே, தென்மொழியில், பொதுமக்கள் பங்கு கொண்டு, பாவாணரின் பைந்தமிழ்ப் பணியை நிறைவேறச் செய்யவேண்டுமென்ற வேண்டுகையை முன் வைத்துச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியீட்டுத் திட்ட'த்தை வெளியிட்டோம். அத்திட்டம் நன்கு செயல்பட்டு வந்ததைக் கண்ட கலைஞர், அது முழுவதுமாக நிறைவேறி, அதன் வழி, அவ் வகராதி வெளிவந்து விடின், அது, நமக்கும் தென்மொழிக்கும் கிடைத்தற்கரிய பெருமையைப் பெற்றுத் தந்துவிடும் என்பதை விரும்பாமலும், அப் பெறற்கரிய பெருமையைத் தாமே செய்ததுபோல் இருத்தல் வேண்டும் என்பதை விரும்பியும், நாம் 1973-ஆம் ஆண்டு சிங்கை, மலேசியச் சுற்றுச் செலவை மேற்கொண்டு, மூன்று மாதங்கள் தமிழகத்தில் இல்லாத வேளை பார்த்து, திரு. குன்றக்குடியடிகளாரைப் பாவாணரிடம் ஏவி, ஒப்புரவு பேசித் தமிழக அரசின் சார்பில்

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி'க் கென்றே ஒரு துறையை ஏற்படுத்தி, அதற்கு நெறியாளராகப் பாவாணரை அமர்த்தியதும், அவ்வாறு அமர்த்தியிருந்தாலும் அவருடைய பணியாக்கத்திற்கு இடம், தட்டு முட்டுப் பொருள்கள், உதவியாளர்கள், போக்குவரத்து முதலிய வகையில் போதிய வசதி, வாய்ப்புகள் செய்து தராமலிருந்ததும், அதனால் பாவாணர் அவர்களின் மொழியாக்கப் பணி நன்கு நடைபெறாமலும், இறுதியில் உடல் நலம் குன்றி அவரும் மறைவுற்றதால், அது தன் நோக்கத்தில் நிறைவேறாமலும் போனதும், தூய தமிழ் ஆக்கத்திற்குக் கலைஞர் செய்த ஆக்கமற்ற நிலைகளாகும்; வெளிப்படையாகச் சொன்னால் 'செய்தக்க செய்யாமையானும் கெட்ட' குற்றமாகும்.

இனி, இதனடிப்படையில் இன்னொரு நிகழ்ச்சியையும் கூறியாகல் வேண்டும். அஃதாவது, கலைஞர்க்கு எப்பொழுதுமே நம் மேல் ஒரு விருப்பமோ, மதிப்போ இருந்ததில்லை; அவற்றுக்கு மாறாகப் பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும், நம் பணி நன்கு நடைபெறக் கூடாது என்கின்ற கரவான எண்ணமுமே, அதற்கு முட்டுக்கட்டையிடும் போக்குமே இருந்து வந்துள்ளன.

அதனால், பாவாணருடன் நாமும், நம்முடன் பாவாணரும் இணைந்து நின்று தூய தமிழ்த் தொண்டு செய்தது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இதன் அடிப்படையில் உலகத் தமிழ்க் கழகம் தொடங்குவதற்கு முன்னர் ஒருமுறை நாங்கள் இருவரும் திருச்சியில் இருந்தபொழுது, கலைஞர், மறைந்துபோன பேரா. மெ. சுந்தரத்தைப் பாவாணர் அவர்களிடம் தூது அனுப்பிப் பாவாணர் தனித்திருக்கும்வேளை பார்த்துப் "பாவாணர் நம்மிடம் அஃதாவது, பெருஞ்சித்திரனாரிடம் கொண்டுள்ள தொடர்பைக் கைவிடின், அவர்க்கு மாதம் மூவாயிரம் உருபாச் சம்பள மதிப்புள்ள ஒரு பதவியும், அரசுச் சார்பில் ஒரு வீடும் தருவதாக அவரிடம் 'கூறும் படியும்' செய்தி சொல்லியனுப்பியிருந்தார். பேரா. சுந்தரமும் அதை அவ்வாறே நாள் பார்த்து, இடம், வேளை பார்த்துப் பாவாணரிடம் சொல்லவும் செய்தார். ஆனால் பாவாணர் இதற்குக் கூறியதாக, அவரே நம்மிடம் ஒருமுறை சொன்ன விடைதான் நாம் அவர்பால் இறுதிவரை உழுவலன்பும் தொடர்பும் கொண்டிருக்கும் நன்றியுணர்வை நமக்கு ஊட்டியது. அவ்வாறு அவர் கூறியதாக நமக்குக் கூறிய விடைச் செய்தி இது: அஃதாவது, 'பெருஞ்சித்திரனார் நம் மாணவர்; நாம் அவருடைய ஆசிரியர். அத்துடன் நாங்களிருவரும் நீண்ட நாளைய நண்பர்கள். அவர் நம் தனித்தமிழ்த் தொண்டுக்கு உற்ற துணையும் ஆவார். அவரை இழந்துதான் நான் அப்பதவியையும் வீட்டையும் பெறவேண்டுமென்றால், அப்பதவியும் வேண்டேன்; வீட்டையும் விரும்பேன்" என்பதுதான் பாவாணர், கலைஞர்க்கு, மெ. சுந்தரத்தின் வாயிலாகச் சொல்லியனுப்பிய விடையென்று பாவாணரே நம்மிடம் இதை தேவையான சூழலின் பொழுது வெளிப்படுத்தியிருந்தார். இந்த நிகழ்ச்-

சியே கலைஞர் நம்பால் எத்துணையளவு வெறுப்புக் கொண்டிருந்தார் என்பதைத் தெள்ளென நமக்கு உணர்த்திற்று.

இனி, இஃதன்றிக் கலைஞர் தனித்தமிழ் ஆக்கத்தையும் விரும்பவில்லை என்பதற்குரிய நிகழ்ச்சிச் சான்றுகள் ஒன்றிரண்டையும் கூறியாகல் வேண்டும். இவை இரண்டாண்டிற்குள் நடந்த நிகழ்ச்சிகளாம்.

கலைஞர் அவர்களின் 'முரசொ'லியில் பணியாற்றிக் கொண்டிருந்த அன்பர் ஒருவர் ஒருமுறை அலுவலகத்திற்கு ஓரிரண்டு மணிநேரம் காலத்தாழ்த்தமாகச் சென்றுள்ளார். அவர் அலுவலகத்திற்கு வந்திராத பொழுது, தொலைபேசி வழியாக அவர் அதுவரை வரவில்லை என்பதைக் கேட்டறிந்த கலைஞர், அவர் வந்தபின் தம்மிடம் அவரைப் பேசச் சொல்லுமாறு அலுவலகத்தில் உள்ளவர்களிடம் கூறியிருந்தாராம்.

அதன்படியே, அந்த அன்பரும், அலுவலகம் வந்தவுடன் தொலைபேசி வழியாகக் கலைஞரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "ஐயா, நான் நம் அலுவல் தொடர்பாகத்தான் இன்ன இடத்திற்குச் சென்று வந்தேன். இடையில் மிதிவண்டி பழுதாகிவிட்டதால் குறித்த காலத்திற்குள் வர இயலவில்லை" என்று சொல்லியிருக்கின்றார்.

அதற்குக் கலைஞர், "என்னது மிதிவண்டியா?... ஓ! சைக்கிளைச் சொல்கிறீர்களா?" என்று தொலைபேசியிலேயே நக்கலாக கூறியிருக்கின்றார்.

அதற்கு அன்பர் மேலும் தொடர்ந்து "ஆம், ஐயா, அதை அலுவலகத்திற்குத் தொலைபேசியில் சொல்லலாம் என்றாலும் பக்கத்தில் ஏதும் தொலைபேசி இல்லை. அதனால் பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். அவர் கூறுவதற்குள் கலைஞர் அவரை இடைமறித்து, "என்னது? தொலைபேசியா...? ...ஓ! டெலிபோனைச் சொல்கிறீர்களா" என்று கூறி மீண்டும் அவரைக் கிண்டல் செய்திருக்கிறார்.

இந்த நிலைகள் கலைஞர் தூய தமிழ் ஈடுபாட்டை வெறுக்கும் போதிய நிகழ்ச்சிச் சான்றுகளாகும். இதனை எதற்கு இங்குக் குறிப்பிடுகின்றோம் என்றால், 'தமிழினத் தலைவர்', 'முத்தமிழ் அறிஞர்', 'தமிழ்த்தாயின் தலைமகன்' என்றும், இன்னும் பலவாறும், அவரின் அடியார்களால் புகழப் பெறும் கலைஞர், விரும்பியிருந்தால் நம் அருந்தமிழ்மொழிக்கு இன்னும் ஆக்க நிலையில் எத்தனையோ செய்திருக்கலாமே என்னும் ஏக்கத்தால்தான்; அவர்மேல் வெறுப்போ, பகையோ கொண்டன்று.

'தென்மொழி'யும், 'தமிழ்ச்சிட்டு'ம் திரு. பக்தவத்சலம் தமிழக முதல்வராக இருந்தபொழுது, தமிழ்நாட்டு நூலகங்களுக்கெல்லாம், ஆயிரம் படிகளுக்கு மேல் சென்று கொண்டிருந்தன. அரசே அதை விரும்பிக் கேட்டு நூலகங்களுக்குச் செல்லும்படி ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின், நூலகப் பொறுப்பை ஏற்றிருந்த கலைஞரோ, பிறரோ,

அதை உடனே தடை செய்துவிட்டனர். அதுபற்றி எழுதிக் கேட்டதற்கு அரசிடம் போதிய பொருளில்லை என்று விடை வந்தது. அதே போல், மீண்டும் தி.மு.க. பதவிக்கு வந்தபின், தமிழ்நாட்டின் சிறிய பெரிய தாளிகைக்கெல்லாம் வேறுபாடின்றித் தந்துகொண்டிருந்த 'குடும்பக் கட்டுப்பாடு' விளம்பரத்தைத் தென்மொழி இதழ்க்கும் தரச் சொல்லி எழுதியிருந்ததற்கும் அதே விடை வந்தது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? தூயதமிழ் வளர்ச்சியிலும், நம் தொண்டை ஊக்குவிக்கவேண்டும் என்பதிலும் அவர்க்கு விருப்பமில்லை என்பதையும். அதற்கு மாறாக வெறுப்பு இருந்தது, இருக்கிறது என்பதையுந்தானே என்பதில் யாருக்கேனும் ஐயம் இருக்கமுடியுமா என்பதை அன்பர்களின் முடிவுக்கே விட்டுவிடுவோம். இங்கு மனந்திறந்து ஒன்றைச் சொல்லியாகல் வேண்டும். கலைஞர் நமக்கு ஆதரவாக இல்லையென்றாலும், நம்மை விரும்பவில்லை. மாறாக வெறுக்கிறார் என்றாலும், நாம் வருத்தப்படப் போவதில்லை. சண்டைக்காரன் காலில் மட்டுமன்று, சான்றாளன் காலிலும் விழாமல் இருப்பதற்கு நாம் பெருமையே படுகிறோம். ஆனால். தூய தமிழ் வளர்ச்சிக்கு, வாய்ப்பிருந்த பொழுது அதற்கென அவர் நன்கு உதவியிருக்கலாமே! நம் மேல் உள்ள தனிப்பட்ட வெறுப்பால், தென்மொழித் தொண்டையும் ஏன் அவர் தடை செய்திருக்க வேண்டும்? அஃது அவருக்குத்தான் இழப்பு!

இனி, இன்றோ, சூழ்நிலையே தலைகீழாக மாறியிருக்கிறது; தமிழுக்காகவும், தமிழினத்திற்காகவும், தான் என்று முன் நிற்பவர்கள் அருகி வருகிறார்கள். பார்ப்பனர்கள் ஆட்சி வலிந்து நிற்பதால், பார்ப்பனர்கள் கருத்துக்கும், சமசுக்கிருதத்திற்குந்தான், அரசியல்காரர்களும், போலித் தமிழ்த் தலைவர்களும், பொறுக்கித்தின்ன விரும்பும் தமிழ்ப் பேராசிரியர்களும் போட்டி போட்டுக் கொண்டு சார்பாகவும் ஆதரவாகவும் இருக்க விரும்புகிறார்கள். வரலாற்று உண்மைகளை மறைத்துப் பேசுகிறார்கள்; தமிழை அவர்கள் விரும்பும் வகையில் திரைப்படத் தமிழாகவும் தெருநடத் தமிழாகவும் ஆக்க விரும்புகிறார்கள். ஏதோ ஒருவகையில் நடந்து ஆட்சியாளர்களின் அரவணைப்புக்கும், பட்டங்களுக்கும் பரிசுகளுக்கும். பதவிகளுக்கும் பல்லிளித்து வாழ விரும்புகிறார்கள். அவரவர்களின் மெலிவுகளுக்கும், சுழிவுகளுக்கும் நெளிவுகளுக்கும் ஏற்பவும், தமிழையும், மெலித்தும் சுழித்தும் நெளித்துமே வழங்கப் பார்க்கின்றார்கள்.

இத்தகைய கொடிய, ஆட்சி மாறுதல்களுக்கும், கால மாறுதல்களுக்கும் இடையில் தென்மொழி போலும் சொல்லாய்வறிஞர் அருளி போலும் மெய்த்தொண்டாற்றும் முயற்சிக் கூறுகள் நிறைய நிறையத் தேவை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாதது.

சென்ற, இரண்டு மாதங்களுக்கு முன், திருச்சி 'பாரதிதாசன் 'பல்கலைக் கழக'த்தில் நடந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில்,

Scanned with CamScanner

நம்(!) கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் கீழ்வரும் ஒரு கருத்தைத் திருவாய்(!) மலர்ந்தருளியிருக்கின்றார்.

"தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், தனித்தமிழ் வெறியர் ஒருவரை' (அருளி அவர்களைத்தான் அவ்வாறு கூறுகிறார்) அகராதி ஆக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளது. தூய தமிழ் அகராதி செய்வதானால், அத்தகைய ஒருவர்க்குச் சமசுக்கிருத அறிவு தேவை. அப்படியில்லாத ஒருவரைப் பல்கலைக் கழகம், எப்படி அந்தப் பணிக்கு அமர்த்தலாம்" என்று பழித்துக் கூறியிருக்கிறார்.

திரு. அரங்கநாயகம் கள்ளுக்கடைக்குக் காந்தியின் பெயரிட்டு வழங்கும் பெருந் (மெ)த(ா)கையாளர்! அவரின் அறிவு அரசியல் செயலலிதாவின் அடிமுடி காணத்தான் பயன்படுமேயன்றி நரை பழுத்த தீந்தமிழின் செழுமை முடி காணப் பயன்படாது என்பது அவருக்குத் தெரிந்த உண்மையாகத்தான் இருக்க முடியும். அவருடைய மூங்கைப் பேச்சுக்குத் தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் இற்றைத் துணை வேந்தர் திரு(!). சி. பாலசுப்பிரமணியம் அவர்களின் பின்புலந்தான் கரணியமாக இருக்க முடியும் என்றால், நாம் வியப்படையத் தேவையில்லை. ஆனால் பார்ப்பனப் பகைவர் சிலரின் தூண்டுகோலாக அஃது இருக்குமெனில், நாம் திரு. அரங்கநாயகத்திற்காகப் பெரிதும் இரக்கப் படுகிறோம். ஏனெனில் திரு. அரங்கநாயகத்திற்குத் தமிழும் தெரியாது; சமசுக்கிருதமும் தெரியாது. நீல வண்ண அரசியல் களத்தில் நன்கு ஆடத் தெரிந்த அவர், தமிழ்நாட்டு அரசின் கல்வியமைச்சராக வந்து நமக்குக் கிடைத்திருப்பது நமது போதாத காலமே! அவருக்கு நாம் நேரடியாகவே ஒரு வினவை வைக்கின்றோம். முடிந்தால் இதை ஒரு வெல்விளியாக(சவாலாக)வே எடுத்துக் கொண்டு விடை கூறட்டும். "சொல்லாய்வறிஞர் திரு. அருளி அவர்களை விட, இன்றைய தமிழ் உலகில், தூய தமிழ் அகராதியைத் தொகுக்கும் மதிநலமும் மதுகையும் நுண்மாண் நுழைபுல வன்மையும் கொண்ட பன்மொழிப் புலமையாளர் வேறு எவரேனும் உளரா— என்பதை திரு. அரங்கநாயகம் தெரிவிக்கவும் தெளிவிக்கவும் வேண்டும். அவ்வாறு அரங்கநாயகம் அறிந்த ஒருவர் சமசுக்கிருதம் தெரிந்த புலமையாளர் இருப்பராயின், அவரைத் தூய த்மிழ் அகர முதலி எழுத்து வரிசையுள் 'அ'கரத் தொடக்கச் சொற்களுக்கேனும் ஒரு தொகுதி செய்யச் சொல்லுதல் வேண்டும். அவ்வாறு அவர் செய்தால், நாமும், அருளி போலும் தூய தமிழ் ஆய்வறிஞர்களும் இச் செந்தமிழ் மொழிப் புலத்தினின்றே வெளியேறி எங்கேனும் விறகு வெட்டிப் பிழைத்துக் கொள்கிறோம். திரு. அரங்கநாயகத்தின் நல்லாண்மை மேலும் அவரின் பின்புலத்தார் எவராகிலும் இருந்தால், அவரின் வல்லாண்மை மேலும் நம்பிக்கையும் சூளும் வைத்து இதனைக் கேட்கின்றோம். இவ் வினவிற்குரிய விடையாளரைத் திரு. அரங்கநாயகம் அவர்கள் வரும் ஓரிரு மாதங்களுக்குள், ஓடித் தேடிக் கண்டு காட்டி, நம் உழுவலந் தாய் தமிழுக்கு அவர் போலியர் செய்த கொடுமை:

களுக்குக் கழுமலமாக, அச் செயலை செய்து முடிப்பாரா? அவரை அன்புடன் விடையிறுக்க வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்." இஃது இவ்வளவில் நிற்க.

இனி நம் அருளியார் அவர்களின் மொழியாய்வு பற்றி, அவரை அறியாதார்க்கு அவரின் சில சொல்லாய்வுக் கூறுகளை இங்கு எடுத்துக் காட்டுவோம். திரு. அரங்கநாயகக் கல்வியமைச்சர் உள்பட இதைப் படிக்கும் அன்பர்கள் பலரின் விழிப்புலன் இனிமேலாகிலும் திறந்து காணட்டும்.

திரு. அருளி அவர்கள், இதுவரை எழுதிய நூல்களுள், மொழியாய்வுத் தொடர்பானவை மிகச் சிலவே ஆகும். ஆனால் அவையே அவரின் அளப்பரிய மொழியாற்றலுக்குப் போதிய சான்று பகர்வனவாகும். அவை இவை:

1) தகுதி — (மொழியாய்வுக் கட்டுரைகள்; (1979)
2) மொழியியல் உரைகள்:
 (தமிழ் — சமற்கிருதம் மற்றும் பிற
 இந்திய மொழிகளின் ஆராய்ச்சி
 நிறுவனத்தில் அருளி ஆற்றிய
 அரிய மொழியியல் ஆராய்ச்சி
 உரைகள் பத்து — ஐந்து தொகுதிகள். 1985.
3) இரு வானொலி உரைகள் (1988)
4) பெற்றோரைப் பற்றி (198 )
5) அயற்சொல் அகராதி (1992)
6) யா. (ஒரு வேர்ச் சொல் விளக்கம்) (1992)

—இந்நூல்களுள் அவரின் தமிழ்மொழி இலக்கண இலக்கிய அறிவும், சொல்லாய்வுத் திறனும், மொழியாய்வுப் புலனும், தமிழ் மொழியைப் பிறமொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, மறைந்திருக்கும் உண்மை உருவை வெளிக் கொணரும் ஒப்பீட்டாய்வு ஆற்றலும், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீனம், கிரேக்கம், சமற்கிருதம், பிராகிருதம், இந்தி, பாலி முதலிய ஐரோப்பிய இந்திய மொழிகளில் அவர்க்கிருக்கும் ஆழமான ஈடுபாடும் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகின்றன.

முதற்கண் தமிழில் எந்தெந்த மொழிகள் கலப்புற்றுள்ளன என்பதை இதுவரைப் பாவாணர் உள்பட எவரும் முழுமைப் பட்டியலிட்டுக் காட்டவில்லை. அருளி அதைத் தெளிவாகக் கீழ்வருமாறு காட்டுவார்.

1. அரபி 2. ஆங்கிலம் 3. இந்தி 4. இந்துஸ்தானி 5. இலத்தீனம் 6. இசுப்பானியம் 7. ஈபுரு (எபிரேயம்) 8. உருது 9. கன்னடம் 10. சமற்கிருதம் 11. சிங்களம் 12. சிரியக் 13. டச்சு 14. தெலுங்கு 15. துருக்கி 16. பஞ்சாபி 17. பாலி 18. பிரஞ்சு 19. பிராகிருதம் 20. பிரேஜியன் 21. பெரிசியன் 22. போர்த்துக்கீசியம் 23. மராத்தி 24. மலையாளம் 25. மலாய் 26. ஜப்பானியம்—ஆகிய இருபத்தாறு மொழிச்" சொற்கள் தமிழில் கலந்துள்ளன.

இவையன்றித் தமிழும் பிறமொழிச் சொற்களும் கலந்த இருபிறப்பி (Hybrid) என்னும் வகைச் சொற்களில் உள்ள கலவை மொழிகளும் இவை இவையென்று காட்டுவார். அவை:

இந்துஸ்தானி + தமிழ், இந்தி + தெலுங்கு, சமற்கிருதம் + தமிழ், சமற்கிருதம் + உருது, உருது + தமிழ், உருது + மராத்தி, உருது + அரபி, தமிழ் + சமற்கிருதம், பெர்சியன் + தமிழ், ஆங்கிலம் + தமிழ், பிராகிருதம் + சமற்கிருதம், மராத்தி + தமிழ் —என்னும் அளவில் கலந்த பன்னிரு வகைக் கலப்பாகும். இவை காலப்போக்கில் அவரின் ஆராய்ச்சி வழி விரிவடைவதற்கும் வாய்ப்புகளுண்டு.

—நூற்கள்— 'இவை தமிழல்ல', 'இரு வானொலி உரைகள்.'

(தொடரும்)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலங்கரை விளக்கமாகக் காலங் காலத்திற்கும் காண வேண்டும் என்னும் கருத்துக் கொண்டே அவ்வாறு எழுத எண்ணினேன். நமக்கது கடினமாக இருந்தால் நாம் மொழிநிலையில மிகவும் தாழ்ச்சியுற்றிருக்கிறோம் என்று கருதி, இன்னும் உயர முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, குறள்களைப் பிரித்து எழுதுமாறு கேட்டுள்ளீர்கள். அவற்றை நம் செய்யுள் முறைப்படி, யாப்பமைதி கெடாதவாறு எழுதுவதுதான் சிறந்தது. ஆரிய வேத சூத்திரங்களை எளிமைப் படுத்தி எழுதுமாறு எந்தப் பார்ப்பானும் கோர மாட்டான் அதுவே அவர்களின் தனிச்சிறப்பு என்பான். நாம்தாம் மண்ணிலேயே புரண்டு கொண்டு வானத்தை நம் கைக்குள் கொணரும் மூட உணர்வுடன் செயல்பட விரும்புகிறோம். நீங்கள் வேண்டுவது இயலாததன்று; தேவையில்லாதது. உணர்க.)

○ : 1510 : பொறையின் இறையே!

வணக்கம் 'திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம் கண்டேன் (தென்மொழி சுவடி 26 ஓலை 8) பலரின் உரைகளுடன் ஒப்பிட்டும் பார்த்தேன். எல்லா உரைகளும் பொய்யுரை எனக் கண்டேன். என் எண்ணம் இஃது. இந்தத் தமிழன் என்றுமே உருப்படமாட்டான். ஒரு கை அன்று; இரண்டு கைகள் கூட பார்க்க வேண்டாம். எல்லாப் பணிகளையும் எங்கேயேனும் ஒரு மூலையில் தூக்கி எறியுங்கள்! 'திருக்குறள் மெய்ப்பொருள் உரை'யை எழுதி முடியுங்கள். காரணம், திருக்குறள் இம்மண்ணுலகில் உள்ளவரை தங்களின் மெய்ப்பொருள் உரையும் இருக்கும்; "உயிருக்கு உடல் போன்று, மணத்திற்கு மலர் போன்று, நீர்க்கு நிலம் போன்று"! இன்னும் சொன்னால், பொருளும் புகழும் தங்களின் உண்மையான குறிக்கோளாக எண்ணிக் கொண்டு, போலித்தனமான மாந்தர் பலகோடி இம்மண்ணுலகில் வாழும் நிலையை எண்ணும் பொழுது, "தங்களை விட்டால் மற்றொருவர் பிறப்பாரா" 'மெய்ப் பொருள் உரை' எழுத என்ற ஏக்கமே! தங்கள் நல்வாழ்வை என்றும் விழையும்; அன்பு

—அருள்மணி, பெங்களூர் 51.

# பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்

(மாதிரி உரை—2)

உச) உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

பொருள்கோள் முறை : ஓர் ஐந்தும் உரன் என்னும் தோட்டி-யால் காப்பான், வரல் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து.

பொழிப்புரை : ஐம்பொறிகள் ஒவ்வொன்றையும் (அவை எழுச்சியுற்றுப் பொருள்களின் மேலும், அவற்றை நோக்கிய செயல்களின் மேலும், அவாவிச் செல்லும் பொழுது) அறிவு என்னும் கதவினாலே (அவை அவ்வாறு செல்லாமல் அடைத்துத் தடுத்துக்) காத்துக் கொள்பவன், (மக்கள் நலத்துக்குதவும் படி) வருங்காலச் சேமிப்புக் கிடங்கில் இட்டு வைக்கப்பெறும் நல்ல ஒரு விதை போன்றவன்.

சில விளக்கக் குறிப்புகள் :

1) உரன்—அறிவு, உறுதி, வலிவு என்னும் பொருளைப் பருப் பொருளுக்கும், அறிவு, ஊக்கம் என்னும் பொருளை நுண் பொரு-ளுக்கும் தரும் ஒரு செந்தமிழ்ச் சொல்.

உரன் என்னும் தோட்டி : அறிவு என்னும் கதவு. இதற்குத் துறட்டி, யானைக் குடாரி என்னும் பொருள் கொண்டும், அதை யொட்டி 'ஓர் ஐந்தும்' என்பதற்கு ஐந்து பொறிகளாகிய 'ஐந்து யானைகள்' என்று கொண்டும், முன்னுள்ள பரிமேலழகர் முதல் பாவாணர் வரையுள்ள உரையாசிரியர்கள் அனைவரும் குன்று முட்டிய குருவிபோல் இடர்ப்படுவர்.

ஐந்து பொறிகளையும் ஐந்து யானைகள் என்று உரு-வகித்துக் கொள்வது அறத்தவறு. துறட்டியோ, குடாரியோ, 'அங்குசமோ' கை வைத்த பாகன் ஒருவன், ஐந்து யானைகள் மேல் இவரிச் செல்வது யாங்ஙன்?

மேலும் அவை மதங்கொண்டு அடங்காது அலைக்கலுறும் பொழுது, அவ் வைந்தின் மேலும் தாவித் தாவிப் படர்ந்து, அவற்றை அப்பாகன் குடாரி கொண்டோ துறட்டி கொண்டோ அடக்குவதும், காப்பதும் எவ்வாறு? இவ்வாறு பொருள் கூறுவது நகைப்பிற்கன்றி உலகியலுக்கும் பொருந்தாது என்க.

இனி, 'ஓர் ஐந்தும்' என்பதற்கு, ஒரு யானை என்று பொருள் கொண்டு, அதன் ஐந்துறுப்புகளாகிய நான்கு கால்கள், ஒரு வால் என்று உருவகித்துக் கொள்ளுதலும் பொருந்தாது என்க. ஏனெனில் அதன் ஐந்துறுப்புகளும் இணைந்து செயல்படுவது போல், பொறிகள் ஐந்தும் ஒன்றாக இணைந்து செயல்படுவதில்லை. கண் ஒன்றைக் காண விழையும் பொழுது, காது வேறொன்றைக் கேட்கவும், வாய் மற்றொன்றைச் சுவைக்கவும், மூக்கு இன்-

Scanned with CamScanner

னென்றை முகரவும், அடுத்தவொன்றின் மேல் படர்ந்து நுகரி-வும், விழையுமன்றோ? இவை ஒவ்வொன்றையும் அறிவு கொண்டு தனித்தனியே போராடுதலே, யானைப் பாகன் துறட்டி கொண்டு யானையை அடக்குவதற்குப் பொருத்தியுரைப்பது எங்ஙன்? எனவே, ஓர் யானை உருவகமும் பொருந்தாதென ஒதுக்குக.

இவையிவ்வாறாக, தோட்டி என்பதற்குக் கதவு என்று பொருள் கொள்வதே மிகப் பொருந்துவதாம் என்க.

என்னை? பொறிகளின் ஐந்து வாயில்களையும் தேவையில்லா விடத்து, அறிவு என்னும் கதவை அடைத்துக் காத்துக் கொள்-வதே இங்குக் கூறப் பெறுவதாகலின், அதுவே சாலப் பொருந்-தும் உருவகமாம் என்க.

தோட்டி—கதவு.

தொல்—தொடு—தொடு—தொகுப்பு — இணைத்து வைத்திருப்-பது—மூடி வைத்திருப்பது.

தொல்—தொலி—தோல்—விதை, காய், கனி, மரம் இவற்றை-யும், உடம்பையும் பொதிந்து மூடி, காப்பாக வைத்-திருக்க உதவுவது.

தொல்—தொலு—தொடு—தொடி—வளையல்கள் கழன்று விழா-மலிருக்க, முன் கையில் காப்பாக, கைப்பிடிப்பாக அணியும் வளை.

தொடி—தொடு-தோடு—அவரை ,புளி, பலா முதலிய விதைகளை, விளா, முந்திரி முதலிய காய்களை, முட்டை ஆகிய இவற்றை மூடிக் காப்பாக வைத்துள்ள சிறிது வலிவான தோல்.

தொடி—தொட்டி—தேங்காயின் மேல் மூடியிருக்கும் கனமான தோடு—சிரட்டை. (கொங்கு நாட்டு வழக்கு) நீரைத் தேக்கிக் காத்து வைக்க உதவும் நீர்த் தொட்டியையும் குறிக்கும்.

தொட்டி—தோட்டி —இல்ல வாயிலை அதுபோலும் திறப்புகளை மூடிக் காப்பாக வைக்க உதவும் கதவு.

தோட்டி—இன்னும் ஆற்று நீரைத் தடுத்துக் காத்து வைக்க உதவும் அணை, சுடலையைக் காக்கின்றவன் என்று காத்-தல் பொருளில் பிறவற்றையும் குறிக்கும்.

2) ஓரைந்தும்—ஓர் ஐந்தினையும்—ஐந்து பொறிகள் ஒவ்வொன்-றையும்.

உரையாசிரியர் பிறர், 'ஐந்து' எனும் சொற்கு மட்டும் ஐந்து பொறிகள் என்று பொருள் கண்டு, 'ஓர்' என்னும் சொற்குப் பொருள் காணாதது குறை. ஓர் ஓர் ஐந்தும் (ஒவ்வோர் ஐந்தும்) என்பது 'ஓரைந்தும்' என்று குறுகி நின்றது.

3) காப்பான்—தேவையில்லாத விடத்து, அப்பொறிகளை அறி-
வென்னும் கதவால அடைத்துக் காப்பான். நல்ல நோக்-
கத்திற்குச் செயல்படுமாறு பொறிகளைத் திறந்து, அல்ல
நோக்கத்திற் செல்லுங்கால் அடைத்துக் காக்க வேண்டு-
வது அறிவு என்றார்.

'சென்றவிடத்தான்' என்னும் குறளிலும் (422)
இக் கருத்தை வலியுறுத்துவார்.

இனி, ஐம்பொறிகளை அவிப்பது (6), (25), (694), அடக்கு-வது (126)—முதலிய நிலைகள், அவற்றைத் 'தீது ஒரீஇ நன்றின் பால்' உய்த்துக் காப்பதை உணர்த்துமே யன்றி, அவற்றின் உணர்வுகளையும் இயக்கங்களையும் அறவே நீக்கி அல்லது ஒழித்து விடுதலை யன்று: என்னை? அவையில்லா உடலியக்கம் ஏது என்க:

ஐம்பொறிகளை நற்பயன் நோக்கிச் செலுத்தியும், தீப்பயன் நோக்கிச் செலுத்தாமலும், அவ்வப்பொழுது அறிவுத்தடை கொண்டு காத்துக் கொள்ளும் ஒருவன், தன் அற நோக்கத்துச் சிறந்து நிற்பானாகலின், அவனின் விளைவுகளே எதிர்வரும் மக்க-ளினத்துக்குப் பயன்படும் என்றார்.

4) வரன்—வரல்—எதிர்ந்து வரவிருக்கும் காலம். எதிர்காலம்:
ல்.ன் போலி. (வரல் + ஆறு—வரலாறு: இச்சொல் மிகப்
பிந்தியது எனினும் ஆசிரியர் காலத்து 'வரல்' என்னும்
சொல்லே வரலாறு குறித்தாதல் வேண்டும்.)

இனி, வரன் என்பதற்கு 'மேல்' என்றும் மேலுலகம் என்றும் பரிமேலழகர் பொருந்தாப் பொருள் கூறினார்: அவரையடுத்த பிறர் பலரும் அவரையே வழிமொழிந்தனர்: பாவாணரோ, புரம்—மேல்; புரம்—பரம்—வரம்—வரன்—மேலுலகம், வீட்டு-லகம் என்று இட்டுக்கட்டி அரண் செய்தார்.

5) வைப்பு—எய்ப்பில் வைப்பு — சேமிப்பு: எதிர்காலத்திற்குப்
பயன்பெறுவதற்காகச் சேமித்து வைப்பது. இது பணங்-
காசாகவும், பொன் பொருளாகவும், தவசங்களாகவும்,
(தானியங்களாகவும்) நெல் முதலிய உணவுப் பொருள்-
கள், (கூலங்களாகவும்) பருப்பு முதலிய (தின் பொருள்-
கள்) அருங்குவைகளாகவும், விளை வித்துகளாகவும் ஆக-
லாம்.

6) ஓர் வித்து—நல்லதொரு விதை: தேர்ந்தெடுத்து வைக்கப்-
பெற்ற ஒரே நல்விதை. பிறபொருள்கள் சேமித்த அவ்-
வளவில் பயன் தருவன. நல்வித்து—மேலும் பல நல்-
விளைவுகளுக்கு ஆக்கமாக இருத்தலின் அவற்றினும்
இதையே மேம்படுத்திக் கூறினார்.

நீத்தல், பிறர்க்குத் தன்னையழித்துக் கொள்ளும் விதை போலும் பயன்படுதல் வேண்டும் எனக் குறிப்புக் காட்டினார்.

# பாரதி தேசியப் பாவலரா? இல்லை!, பார்ப்பனீயத்தைக் காத்த பாவலர்!

— அதியமான் —

இலங்கையை ஆண்ட இராவணன் பாரதிக்கு அரக்கன்; நேருவிற்கு திராவிடன்; அஃதாவது தமிழன். அந்தத் தமிழ் மன்னனை அழிக்கப் பயன்பட்ட வில் அன்னை பயங்கரி பாரத-தேவியின்—ஆரிய இராணியின் வில். பாரததேவி என பாரதத்தைச் சொன்னாலே அவள் ஆரிய இராணியேதான். இதைத் தெரிந்தும் உணரத் தெரியாத களிமண்ணை மூளைக்குப் பகரமாக வைத்திருக்கும் பாரதித் தமிழர்களே! ஆரிய அரசியின் வில் தமிழனை வென்று விரட்டி விட்டது. எனவே இ'து ஆரியநாடு என்று பாரதி முழங்குகிறார். எனவே ஆரியரிடம் இருக்கும் தமிழ் நாட்டை மீட்பதற்காக வரப்போகிறாயா? அல்லது ஆரியன் தரும் எச்சில் இலை மிச்சத்திற்காக அவனோடு சேர்ந்து இ'து ஆரிய நாடுதான் என்று அவனுக்கு அடிமையாகப் போகிறாயா? வட-நாட்டுப் பார்ப்பானுக்கு அடிமையாக இருக்கும் தமிழனே! உனக்கு மானம் இருக்குமானால் சிந்தித்துத் தமிழ்நாட்டை மீட்பதற்கு எழுந்து போராடு; அல்லது பேசாமலிரு. பாரதநாடு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

'வித்து' ஈகத்திற்கு உருவகம்,
'தம்மின் தம் மக்கள்' என்னும் குறளிலும் (68)
—இதை வழிமொழிந்து வலியுறுத்தினார்.

''இது வீட்டு நிலத்திற் சென்று முளைத்தலின் 'வித்து' என்றார்'' என்னும் பரிமேலழகரது கூற்று வெற்றுரை.

வீட்டுலகம் (மோட்சம்) என்பதொன்றும், நிரயம் (நரகம்) என்பதொன்றும், இவ்வுலகத்தினும் வேறாம் எங்கோ உள்ளன-வென்பது, அறிவியலுக்கும், ஏன், மெய்ப்பறிவியலுக்குமே பொருந்தாத கற்பனைச் செய்தி. மதத்திற்கு மட்டிலும், அதுவும் வேத மதத்திற்கு மட்டுமே பொருந்திய செய்தி.

இனி, வீட்டுலகம் செல்வார் வினையின்றி, இன்பத் துய்ப்-பொன்றே கொண்டிருப்பர் என்பதும், அங்கவர் பசி, விடாய் போலும் எவ்வகை உடல் வருத்தங்களுமின்றி இருப்பர் என்ப-தும், அது தொடர்பான கற்பனைகளுள் ஒன்றாயிருக்க, அங்கு உழுநிலம் உள்ளதென்பதும், அங்கும் வேளாண்மை நடைபெறு-தலும் உண்டென்பதும், அதற்கு இங்கிருந்தும் வித்துகள் போக வேண்டுமென்பதும், அம்மூடக் கற்பனையுள்ளும் புகுத்திய முரண்-பட்ட புல்லிய நகைக் கூறாகும்; இது மலத்தில் சாணி கலந்தது போலும், மடத்தில் மூடங்கலந்த கூற்றுமாம் என்று இகழ்க. ○

என்று ஆரிய ராணியைச் சொல்ல எல்லாத் தமிழர்களும் அணியமாக இல்லை என்பதை உணர வேண்டும். இப்படிப் பாரதி தன்-இனத்திற்காக வரலாற்றைப் புதைத்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். வரலாற்றைக் கீறி நஞ்சைப் பொதிந்து வைக்கிறார்; அத்தனைச் செய்திகளையும் இங்குக் கூற இயலவில்லை. பாரத-ஒற்றுமை எனக் கெக்கலிக்கும் கூத்தாடித் தமிழர்கள் பாரதிப் பார்ப்பானின் பாடல்களைப் படித்துப் புரிந்து கொள்வார்களாக.

## சாதியை ஒழிக்கப் பாரதியாருக்கு விருப்பம் இல்லை!

இந்த் நாட்டைச் சாதி வேறுபாடுகள்தாம் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கிறது என்று, புத்தர் முதல் காந்திவரை கூறினார்கள். பாரதியும் கூறி இருப்பதாய்த் தப்பு அடிக்கிறார்கள். அதற்குச் சான்றாகப் பாரதியாரின் பாப்பா பாட்டை எடுத்துச் சுட்டிக் காட்டிப் பெருமை அடிக்கிறார்கள்; அதில்:-

''சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

எனக் கூறுகிறார். 'சாதிகள் இல்லை' என்ற பாரதி, அதை ஒழிக்கக் கூறாமல், 'குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று அறிவுரைதான் கூறுகிறாரேயன்றி, ஒழிக்கக் கூறவில்லை என்பதை உணர்தல் வேண்டும். 'பாவம்' என அவர் குறிப்பது அறிவுரை-தான். அறிவுரையைச் சாதி ஒழிப்பில் கூறுவதை எவனும் கேட்க மாட்டான். ''பாதகஞ் செய்பவரை முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'' எனக் கூறியபடி சாதி ஒழிப்புக்கும் உணர்ச்சியோடு கூறி இருந்தால், சாதி ஒழிப்பில் பாரதி விரைவாக இருக்கிறார் என்றாவது நினைக்கலாம். அப்படி உணர்ச்சியோடு சாதி ஒழிப்புக்கு விரைவு காட்டவில்லை. மேலும் அவர் வந்தேமாதரம் என்ற தலைப்பில் எழுதிய பாவில்

''ஆயிரம் உண்டிங்குசாதி—எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?''

என்பதால், 'சாதிகள் இருக்கும். ஆனால் 'அந்நியர் வந்ததுதான் ஞாயம் இல்லை' 'என்கிறார் சாதிகள் அப்படியேயிருக்குமாம். அதில் ஒரு மாற்றத்தையும் பாரதி விரும்பவில்லை. 'சாதி ஒழிந்து விட்டால்பார்ப்பனியமும் ஒழிந்துபோம்' என்பது பாரதிக்கு தெரிந்தே இப்படிப் பாடினார். சாதிகள் ஒழிய பாரதி பாடினார் எனக் கூறுவது பெருந்தவறு; தந்தை பெரியார்தாம் சாதியை ஒழிக்க விரைவு காட்டியவர். அதற்காக சாதி ஒழிப்புத் திருமணங்களை நடத்தி வைத்தார். இதன்வழி சாதி ஒழிந்துவிடும். பாரதி அப்படி ஒரு திட்டத்தைக் கூறவில்லை.

அக்கால வடநாட்டுத் தலைவர்களைப் பாரதி புகழ்ந்து பாடல்களை இயற்றினார். காந்தி, திலகர், குருகோவிந்தர், லாசாபதி போன்றவர்களைப் பாடிய பாரதி சாதி ஒழிப்பில் மிக உறுதியான

பணியாற்றிய அம்பேத்கரைப் பற்றி ஒரு சொல் கூடப் பாடவில்லை. அம்பேத்கர் காந்தியை விட சாதி ஒழிப்பில் மிக விரைவு காட்டியவர். சாதியை வளர்க்கும் பார்ப்பனியத்தைச் சாடியவர். உண்மையிலேயே சாதியை ஒழிக்க பாரதி விரும்பி இருந்தால், வடநாட்டுத் தலைவர்களைப் பாடிய வரிசையில் அம்பேத்கரையும் போற்றி இருக்க வேண்டும். 1882-இல் பிறந்த பாரதி 1921 வரை வாழ்ந்தவர். அம்பேத்கர் 1891இல் பிறந்து 1956 வரை இங்கு வாழ்ந்தவர். அம்பேத்கரைப் பாரதி கட்டாயம் அறிந்திருப்பார், ஏன் அவரைச் சாதி ஒழிப்பிற்காக உழைத்த பெருமையைப் பாராட்டவில்லை? அம்பேத்கர் சாதி ஒழியச் சொன்னவர் என்பதால் அவரை விட்டு விட்டார்.

வ.உ.சியைப் பாரதி பாராட்டினார். அவரைப் போன்றே தந்தை பெரியாரும் பேராயக் கட்சியில் கடுமையாக உழைத்தவர். இருவருக்கும் உள்ள வேற்றுமை முன்னவர் சத்சூத்திரர்* பின்னவர் வெறுஞ்சூத்திரர்* எனவே பெரியாரைப் பற்றி ஒரு சொல்கூட சொல்லவில்லை. சாதிக்கு அடித்தளம் அமைத்து அதனை வளர்த்துக் கொண்டிருக்கும் பார்ப்பனருக்கு எதிரான செயல்களை பெரியார் செய்ததால், ஈ.வெ.இராவைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகையால் பார்ப்பனியம் வளரத் துணையாக இருந்தவர்களையே பெருந்தலைவர்களாகப் பாராட்டிப் புகழ்ந்தார். பார்ப்பனியத்தை எதிர்த்தவர்களை தன் இனம் காக்க அவர்களை விட்டு விடுகிறார். இவரை எப்படிச் சாதி ஒழியப் பாக்கள் இயற்றியதாகக் கூறமுடியும்? பாரதி ஓர் ஆரிய வெறியர். தமிழர்களுக்கு மயக்க ஊசி போட்டு மயங்க வைத்து ஆரியத்தை வளர்த்த கரவாளர்.

அடுத்து 'முரசு' என்ற தலைப்பில் ஒரு பாடலைக் காணல் இன்றியமையாமையாகும்.

''நாலு வகுப்பும்இங் கொன்றே—இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே—செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி''

இப்பாடல் ஒன்றே போதும் பாரதி பார்ப்பன வெறியர் என்பதற்கு. தமிழர்களுடைய ஒற்றுமையையும், பண்பாட்டையும் கெடுத்தது பார்ப்பனியப் பண்பாடு என்பது அறிஞர்களின் ஆய்வாகும். இதனை எவரும் இந்நாள் வரை மறுத்தது கிடையாது. மறுக்கவும் முடியாது. மேலே காட்டப்பட்ட பாடல் பாரதி எழுதியது. அதில் ஆரியர் கற்பித்த அடித்தளச் சாதி உணர்வுகள்

* சத்சூத்திரர் — பார்ப்பனர்க்குச் சார்பாக அல்லது எதிராக இல்லாமல் நடந்து கொள்பவர்.
* வெறுஞ்சூத்திரர்— பார்ப்பனர்க்கு எதிராக நடந்து கொள்பவர்.

உள்ளன. அப்பாடலைப் படித்தால் புரியும். நான்கு வகையான வகுப்புகள் என்பவை, பிரம்மாவின் நெற்றியிலுள்ள பிறப்பிடத்தில் பிறந்தவன் பிராமணன் (பார்ப்பான்); மார்பிலுள்ள பிறப்பிடத்தில் பிறந்தவன் சத்திரியன்; தொடையிலுள்ள பிறப்பிடத்தில் பிறந்தவன் வணிகன்; பாதத்திலுள்ள பிறப்பிடத்தில் பிறந்தவன் சூத்திரன். இக்கூற்று அறிவியல் ஆய்விற்கு அப்பாற்பட்ட குழப்படிக் கருத்து; முட்டாள்தனமான கருத்து. ஏனென்றால் உலகில் உள்ள உயிரினங்களுக்கெல்லாம் பிறப்பிடம் ஒன்றே ஒன்றுதான். இதுவே உடலியல் உண்மை. ஆனால் பார்ப்பனர் கூறும் பிரம்மாவிற்கு நான்கு பிறப்பிடங்கள். எவ்வளவு அருவருப்பான செய்தி. இந்த மூடக் கருத்தைத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அதனாலேயே பாரதி இந்த வெறுக்கத்தக்க அருவருப்பைத் துணிவாக தம் பாடலில் நான்கு வகுப்பு எனக் கூறுகிறார். அவ்வகையான வகுப்பில் ஒன்று சிதைந்தாலும் வீழ்ந்திடும் மானிடச் சாதி என்று பறையடிக்கிறார். மிக இழிவான செய்தியைத் தமிழர்களுக்குக் கற்பித்து, ஆரியப் பார்ப்பனரைக் காக்கிறார். அவர்களுடைய வேதத்தில் இவ்வகை அருவருப்பான செய்திகள் மிகுதியாக உண்டு. அந்த வேதத்தை,

வேதமறிந்தவன் பார்ப்பான்—பல
வித்தை தெரிந்தவன் பார்ப்பான்
நீதி நிலை தவறாமல்—தண்ட
நேமங்கள் செய்பவன் நாய்க்கன்;

என்பதாகப் பாடுகிறார். வேதத்தைப் பார்ப்பான் தவிர்த்து வேறு யாரும் கற்றல் தவறு எனக் கூறியவர் அவர்கள். அதனால் பல வித்தை(கல்வி)களையும் தெரிந்தவனும் அவனே. வேதம் கூறும் நீதியைத்(நெறிகளை) தவறாமல் நேமங்கள் (செயலுக்குக் கொண்டு வந்து) செய்பவன் நாய்க்கன். இங்கேயும் சாதி வேற்றுமையைத்தான் கூறுகிறார். ஆரியப் பண்பாடுகளை அகத்துக் கொண்ட பாரதம், இராமாயணம் போன்றவற்றைக் கற்பவர்கள் நாய்க்கர்களே. அவர்கள் பார்ப்பனர்களுடைய பண்பாட்டைக் கைவிட மாட்டார்கள். எனவே அவர்களை நேமங்கள் செய்பவர் எனப் பாரதி கூறுகிறார். இன்னும் இவர்களுடைய இல்லங்களில் பார்ப்பனியப் பண்பாடுகளைக் காணலாம். பெண்கள் கணவனை இழந்தபின் அவர்கள் இளம் பக்குவத்தினரானாலும் மறுமணம் செய்ய விடார். கைம் பெண்களாகவே வாழ வேண்டும். இவற்றையெல்லாம் கண்ட பெரியார் அப் பண்பாட்டைச் சாடினார். ஏனென்றால் பெரியார் நாய்க்கர் வகுப்பைச் சார்ந்தவர். பெண்களின் விடுதலைக்காகப் பாரதியாரை விட நூறு பங்கு உழைத்தவர். அவ்வகையில் பார்ப்பனியத்தை எதிர்த்தவர். பாரதி நாயக்கர் என்ற சாதிப் பெயரால் வாழும் மக்களைப் போற்றி விட்டுத் தந்தை பெரியாரை ஒரு சொல் கூட சொல்லித் தன் பாடலில் எழுதவில்லை. தந்தை பெரியாரை நாய்க்கர் குழுவில் இருந்து பிரிக்க அம் மக்களைப் பாராட்டுகிறார்;

# இதோ ஒரு பெரியார்!

— பாவலர் இளஞ்சித்திரன் —

இதோ, ஒரு பெரியார்! —
பெரியார் பெருஞ்சித்திரனுர்! (இதோ)

இதோ, இவர் தமிழ்நில விடுதலைக் குழைப்பவர்;
எந்தமிழ் மக்களை அதற்கே கூவி அழைப்பவர்!
(இதோ)

"அதோ! இதோ!" என் றரசியல்
வாணிகம் செய்யார்!
அரசியலார் பதவி, புகழ்
மெப்புகட்கு மையார்!
இதோ, தலை! என் உயிருடன்
தமிழ்க்கெனும் மெய்யார்!
எதற்குமெவர் இடத்தும்போய்
நின்றிடாத கையார்! (இதோ)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாரதியாரின் பாக்களில் இவ்வகைப் பாக்களை மிகுதியாகக் காணலாம். ஆரியப் பார்ப்பனரின் பண்பாடுகளையும், நாகரிகக் கூறுகளையும் நிலைநிறுத்தவே 'பாஞ்சாலி சபதம்' என்ற சிற்றிலக்கியத்தையும் எழுதினுர். தமிழ் இலக்கியங்களில் சிற்றிலக்கியஞ் செய்ய வரலாறுகள் இல்லாமலா போயிற்று. எத்தனையோ உண்டே! ஆனுல் வேதம் அறிந்தவன் பார்ப்பான். அதனுலேயே பார்ப்பனப் பாவலனுன பாரதி, பார்ப்பனர் பண்பாட்டைக் காக்கப் பாடினுர். அதனுலேயே அவருடைய பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. எந்தத்தமிழ் இலக்கியங்களிலாவது மனைவியை வைத்துச் சூதாடிய வரலாறு இருக்கிறதா? இல்லையே! பாஞ்சாலி சபதத்தில் வீட்டுமன் கூற்றுக அதில் குறிக்கும் பாரதியின் இலக்கியத்தை உன்னிப்பார்க்க வேண்டும்:

"......ஆடவர்க் கொப்பில்லை மாதர்; ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம்; தானமென் வேற்றுவர்க்குத் தந்திடலாம்" என்று குறிப்பிடுகிறுர் பாரதி. பெண்ணை அடிமைப்படுத்துவதே நெறி எனக் கூறுகிறுர். பார்ப்பனர் வேதங்கள் கூறும் பெண்ணடிமை சரியென்றே வழக்குரைக்கிறுர். இவரை பெண்ணடிமை நீங்கப் பாடிய பாவலனெனத் தமிழ்ப்புலவர்கள் தண்ணீர் குடித்துக் கொண்டு கத்துகிறுர்கள்.

எனவே பாரதி ஒரு தேசியப் பாவலனும் அல்லர்; அவருடைய இனத்திற்காக, அதன் வளத்திற்காகப் பாடிய பார்ப்பனியப் பாவலரே, பாரதி! (முற்றும்)

சாதிகளை ஒழித்திடும்
கொள்கையில் நெருப்பு !
தமிழர்களை ஒன்றுக்கிப்
பார்த்தலில் விருப்பு !
சாதியிலாத் தமிழினத்தை
மீட்டெடுக்கும் பொறுப்பு
தனையுடையார் ! அதில்வழுவா
வீரமேயவர் இருப்பு ! (இதோ)

நச்சரவம் ஆரியத்தை
வீழ்த்தவந்த பருந்து !
நமக்குயிர் வாழ்வளிக்க
கிடைத்தவரன் மருந்து !
கொச்சையில்லா அவரே ஓர்
இலக்கிய விருந்து !
குருடனும்கண் பெற்றிடுவான்
அவர்எழுத்தி லிருந்து ! (இதோ)

கூனனும் நிமிர்ந்திடுவான்
அவர்பாட்டைக் கேட்டு !
கோழைக்கும் வீரம்வரும்
அவர் நடையைப் பார்த்து!
மானநல் பயிர்விளையும் !
அவருடன்சேர் கூட்டு !
வண்டமிழர் பகைக்கெல்லாம்
அவரதிர்ந்த வேட்டு ! (இதோ)

எட்டப்பர், வீடணரை
அடையாளம் காட்டும் !
இவர் தூவல், அவர்கைக்கு
விலங்குகளை மாட்டும் !
வெட்டிச்சொல் தொண்டர்களை
இவர்தொண்டு வாட்டும் !
விடுதலைப்போர் மறவுணர்வைத்
தமிழருக்கோ ஊட்டும் ! (இதோ)

தனித்தமிழின் நாடொன்றே
தமிழருக்கிங் காக்கம்!
தனைப்பெறுதல் ஒன்றேதான்
அவர்வாழ்நாள் நோக்கம்!
தனித்தமிழப் புலவரவர்;
அவரறிவின் தேக்கம் !
தமிழரைமீட் டெடுக்காமல்
அவர்க்கில்லை தூக்கம் ! (இதோ)

Scanned with CamScanner

# பொதுமை - தமிழில்!

—பறம்பை அறிவன்

பொதுவுடமை, பொதுவுடைமை என்று கூறுவதை விடக் 'கம்யூனிஸ்டு', கம்யூனிஸம்' என்றால் தான் சரியானது. இப்படிக் கூறுபவர், புரிந்து கொள்பவர் அல்லர்-அதே வேளை புரிந்து கொள்ள மறுப்பவர் ஆவார். 'பொதுமை', தத்துவத்தை-மெய்யியலைக் குறிக்கவும், அக்கொள்கையாளர்களைப் பொதுமையர், பொதுமையாளர் என்று குறிக்கவும் செய்யலாம்!

தமிழில், தமிழன் ஒரு மெய்யியலைப் புரிந்து கொள்ள முடியாதெனில், அம்மெய்யியலைத் தமிழன் புரிந்து கொள்ளாமல் இருப்பதொன்றும் இழப்பாகி விடாது!

பொதுமை என்ற மெய்யியல் 'மார்க்சின்' பெயரால் மார்க்சியம் எனச் சுட்டப்பெறுகிறது. அதனால் அம்மெய்யியல் 'அவர் கண்டு பிடிப்பு' ஆகிறது. ஏற்கனவே, கண்ட காணும் மெய்யியல் மார்க்சால் வளர்த்தெடுக்கப் பெற்றதென்று கூறலாம். இம்மெய்யியல் புரிதலுக்குத் தமிழ் மக்களின் வாழ்வியலை அறிதல் போதுமானதாகும்!

எசு. என். நாகராசன், ஞானி போன்றவர், 'மண்ணிற்கேற்ற மார்க்சியம்' என்று கூறியபோது, பகடி பண்ணியவர் உண்டு! ஒரு மெய்யியலை அம்மண்ணின் மக்கள் பண்பாட்டிற்குத் தக விளங்கிக் கொள்கின்றனர். பண்பாட்டுப் பரிமாற்றம் விரைவு பெறப் பெற மெய்யியல் புரிதலும் விரைவுபடும்!

'கட்சி'களில் மெய்யியல் நடைமுறைப்படுத்தப்படும். ஆனால், மெய்யியல் நடைமுறைக்கிடையே உண்டாகும் 'வெளி' பற்றியும் நாம் கருத்துச் செலுத்துதல் வேண்டும். கட்சிகளின் ஊடாகவும், மக்களியக்கங்களின் ஊடாகவும் மார்க்சியம்-பொதுமை-வளரும். குமுக அறிவியலான பொதுமையின் வளர்ச்சி பல்வேறு படிநிலைகளில் ஏற்படுவதாகும். மார்க்சு வரையறை-கூறிய, படி நிலைக்குரிய பெயர்கள் அறிவியல் நோக்கில் முன்னுரைக்கப்பட்டன! இப்பெயர்கள் பொருந்தாமற் போகவும், புதுப் பெயர்ச் சுட்டுப் பெறவும் கூடிய காலம் வரும்!

தமிழகத்தின் குமுக வளர்ச்சி மாற்றங்களைத் தொகுத்து உரிய பகுப்பாய்வு செய்வதன் மூலம், அம்மாற்றங்களுக்குரிய பெயர் சூட்டத் தமிழால் முடியும்! அவ்வாறின்றி, மேல் நோக்கி இருப்பவர் சூட்டும் சுட்டுப் பெயர்கள் நிலைபெறாமல் போகும்!

தமிழின், தமிழரின் உரிமை எழுச்சியூனூடாகவே, மெய்யியல் வளர்ச்சியும் அமையும்! இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ப் பாக்களில் ஏற்பட்ட மார்க்சியத் தாக்கம் குறித்து எழுதிய முனைவர் கோ. தான்யா என்பவர், தமதாய்வுக்காக எடுத்துக் கொண்ட கால எல்லையும், இயக்கமும், நூல்களும் குறுகிய தன்மையுடையன. ஆயினும் எடுத்துக் கொண்ட விளக்கங்களை வைத்து 'மார்க்சியத் தாக்கத்தை'ப் பெற்ற பாக்களை ஆராய்ந்துள்ளதை வரவேற்-

போம்; குறிப்பாகப் பாரதியை அவர் மார்க்சியப் பாவலர்—(மார்க்சியக் கவிஞர்) அல்லர் என்று நிறுவியிருக்கிறார் என்பது பாராட்டத் தக்கது.

ஆயினும், தமிழ், தமிழின மரபுவழி நின்று எழுதி வருகின்றவர், 'பொதுமை'யுணர்வுக்கு ஆள்பட்டனர் என்பதைக் காணமுயலாமை, அறிஞர். ந. சஞ்சீவியின் வழி காட்டுதலைப் பெற்றார் என்பதில் பொருளில்லாமற் போகிறது!

தலைப்புக் கொடுப்பதும், அதற்குள்பட்டு ஆய்வதுமான சூழல், மார்க்சியத் தாக்கத்தைத் தமிழும், தமிழரும் பெற்று வந்தமையை நிறுவப்போதும்! வா. மு. சேதுராமன் போன்றவர் பாத்தொகுப்பு உதவிய அளவு, பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைப்புகள் உதவாமல் போயினவா? என்பது போன்ற வினாக்கள் கோ. தான்யா நூலைப் பார்க்க எழுகின்றன; ஏனெனில், ந. சஞ்சீவி எழுதவும், அவர்க்கு உதவவும் வா. மு. சேயும், அவர் வெளியீடு தமிழ்ப் பணியும் உதவின. அந்த வட்டத்தின் உறவைக் காட்டிக் கொள்ள விரும்பியுள்ளார், கோ. தான்யா என்பதும் தெரிகிறது.

பா, பாவியம் யாவிலும் 'பொதுமை'யின் கருத்தாக்கம் காண்பது தற்செயலன்று. அரசியல் போராட்டம், தொழிலாளி, முதலாளி முரண்பாட்டை வைத்துக் கட்டப்பட்டன; இப் 'பொருளியல் போராட்டமே' மார்க்சியம் எனக் கற்பிக்கப்பட்டது; மார்க்சியம் குமுகம் தழுவிய மெய்யியல், இதன் ஒரு கூறு பற்றியே பேசியும் எழுதியும், மார்க்சியத்தைக் 'குருடர் யானை கண்டவாறு' கண்டு விளக்கினர். இன்றிந் நிலைமை 'சிந்தனை' அளவிலாயினும் மாறியுள்ளது என்று சொல்லலாம்! இதற்குத் 'திட்டவட்டமான' காரணம், சோவியத்து ஒன்றியத்தில் ஏற்பட்ட மாற்றமும், சீன நிலைமையும் எனலாம். தொடர்ந்து மார்க்சியம் பல அறை கூவலுக்குக் காரணமாகப் பொதுமைக் கட்சிகளின் நடைமுறை விளங்கி வருகிறது.

பொதுமைக் கட்சி இலக்கிய ஏடுகளில், 'எடு, தூக்கு, போராடு-உடை, நொறுக்கு' என்ற 'அழிவுவழக்கு' தலைதூக்கி இருப்பதைக் கண்டேன். அதே வேளை, மாஓ பாடல்களில் ஆக்கமான சிந்தனைத் தெறிப்பு நெறிப்படுத்துவதைக் கண்டேன்; மா. இலெ. அமைப்புகளின் புரட்சியுணர்வு, இன்குலாப் போன்றவர்களால் உள்வாங்கப் பெற்றுப் புதிய படிமங்களைக் கொண்டன! தி.மு.க. வட்டங்களில் எழுக, வெல்க-இனமானப் போர் முழக்கங்கள் காற்றைக் கிழித்தன- அவை, மூடத்தைக் கிழித்து முன்னேற்ற ஒளியைக் காட்டுவதில் உறுதியற்றிருந்தன எனலாம்!

நேரு காலத்தில் சீனா, இந்திய நாட்டின் மீது படையெடுத்தது- தி.மு.க. போன்ற இயக்கங்கள் 'இந்திய நிலைக்கு' ஆதரவாக நின்றன; பாரதிதாசனும், சீனாவைக் கண்டித்து,

''உலகம் எலாம் பொது என்றாய்
உடைமை எலாம் பொது என்றாய்
கலகம் செய்து நிலத்தை எல்லாம்
கைப்பற்றத்தான் முயலுகின்றாய்''

என்று பாடியுள்ளார், என்கின்றனர். இந்தச் செய்தியும், நட்பும் பின்னணியில் 'சீனா இந்திய நாட்டின் மீது படையெடுத்தது உண்மையா?' என்ற வினாவை எழுப்பின. அதே வேளை, தேசிய இன நலனை முன் வைத்து எழுதாமல் எல்லாவற்றிலும் 'மூக்கை நுழைக்கிற' உணர்வு, எழுச்சி கொள்வது பாவலர்க்கு இயல்பே என அமைதி கொள்ளலாம். அரசியல் ஊதியம் கருதி உண்மையடிப்படைகளை ஓராமல் செயல்படுகின்றவர் அதிகம். அரசின் திட்டம் நடப்பு மீது நம்பிக்கை வைத்து ஒருசார்பெடுத்து எழுதுகின்ற நிலையையும் காணக் கூடியதே.

தம்நாடு, தம்தேசம், தம்மினம், தம்வீடு என்ற உணர்ச்சிப் படிகளில் 'ஏறி' வெற்றி காண்பவர், உண்மை அறிந்தவர் ஆதல் இல்லை. அது கட்டாயமும் ஆகாது. உண்மையை நோக்கி நடை இப்படிகள் உதவக்கூடும்!

## மடல்கள் மதிப்புரைகள்!

— பறம்பை அறிவன்

பாவலரேறு அவர்களுக்குத் தென்மொழி அன்பர்கள் வரையும் மடல்கள் சுவை மிக்கன; எதிர்கால வரலாற்றில் திறனாய்வு பெறுதற்குரியன. அவை மதிப்புக்காகவும், பகட்டுக்காகவும் எழுதப்படுபவை போல் தோன்றும்; ஆனால் உண்மை உணர்ச்சிகளின் ஊற்றுகளாக இருப்பவை. செயல்படவோ உண்மையாகவோ இல்லை என்று பிறகு மாறினும், அவை இயலாமையைப் புலப்படுத்துபவை. இயலாமை ஒன்றும் பொய் ஆகாதென்பது என் கருத்து. இயலும் நிலை எய்துமாயின், உணர்ச்சிகள் செயலாக முகிழ்க்கும், காலம் இதனை மெய்ப்பித்துக் கொண்டுதான் உள்ளது.

சுற்றி வளைத்துச் சொல்வதென்பதால் ஒருண்மை பொய் ஆவதில்லை. பொன் சுரங்கத்தில் பொன் கோடுகள் வளைந்து போவது போல் உண்மையும் நேர்கோட்டில் போவதில்லை. இதனை அறிஞர் அண்ணாத்துரை ஒருமுறை உவமையாகக் கையாண்டிருக்கிறார்! எனக்கு வரும் மடல்களைச் சிறியன, பெரியன என்று பாராமல் ஆராய்வேன்; செய்திக்காகவும், கருத்துக்காகவும், மாந்த உறவுக்காகவும் பதிவு செய்கிறேன். இதில் தனியுறவு, இயக்க உறவுண்டு. ஆயினும், யாவும் இயங்கியல் தன்மை கொண்டவை! இயங்கியல் என்பது, ஒவ்வொரு பொருளிலும் காணத் தக்கதே!

# தமிழ் இன முன்னேற்றத்திற்குத் 'தமிழ்மொழி வழிக் கல்வியே' முதல் தேவை!

க. கண்ணன், அறி. இ.
இணைச் செயலாளர், உ.த.மு.க.

தமிழ் இன முன்னேற்றமும் தமிழ்வழிக் கல்வியும்:-

உலகத்தில் மாந்த இனம் மொழியை அடிப்படையாகக் கொண்ட தனித் தனி தேசிய இனங்களாக இவ்விடைக் காலத்தில் மலர்ச்சியுற்று இருக்கின்றன. ஆகவே உலகிலுள்ள முன்னேறிய இனங்கள் எல்லாம் தங்கள் தாய்மொழி வழிக் கல்வியையே பெறுகின்றன. அவ்வாறே நம் தமிழ் இன முன்னேற்றத்திற்கும் 'தமிழ்மொழி வழிக் கல்வியே' முதல் தேவையாகும்.

தன் மொழியைப் பேசுகின்ற தன் இன மக்களிடமும் நாட்டினிடமும் இயல்பான பற்று இருப்பது இயற்கையானதே, என்றாலும் தமிழினம் தொடர்ந்து வெவ்வேறு இனங்களின் ஆளுமையருக்கும், அவர்களின் மொழிகளுக்கும் அடிமைப்பட்டதால், நாம் நம் தமிழ்மொழியைப் பற்றியும் இனத்தைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் ஒருவரையொருவர் எதிரியாகக் கருதிக்கொண்டு உழல்கின்றோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் இறையாண்மையை மீட்பதற்கும், அதைப்பற்றி மக்களைச் சிந்திக்க வைப்பதற்கும், முதலில் மொழி உரிமையை மீட்க வேண்டுமென்று முன்பும் எண்ணியிருக்கின்றனர்; நாமும் எண்ணுகிறோம். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் தமிழினம் பரவியிருந்து, பின்னர் தனித்தனி மொழித் தேசிய இனங்களாக மாறியபின், வேற்று இனங்களின் ஆளுமையரால் தமிழினமும் தமிழ்மொழியும் எவ்வாறு தொடர்ந்து ஆளுமை செய்யப்பட்டுச் சிதைக்கப்படுகிறது என்பதைப் பின்வரும் வரலாற்றுக் குறிப்புக்களால் அறியலாம்.

யார் யாருக்கு அடிமை? :-

* "தமிழ் நாட்டில், சைனர் ஆளுமையில் இருந்தபோது, தமிழர்கள் பிராகிருத மொழிக்கு அடிமையாக இருந்தார்கள். பௌத்தர் சாய்கால் இருந்தபொழுது பாலிமொழிக்கு அடிமையாக இருந்தார்கள். வடஇந்திய வைதிகர் (ஆரியர்) வந்தநாள் தொட்டு அவர்தம் சமசுக்கிருத மொழிக்கு அடிமையாக இருந்தார்கள்; இருக்கின்றார்கள். விசயநகர தெலுங்கர்கள் தமிழ்நாட்டை கைப்பற்றிய நாள்களில் தெலுங்குமொழிக்கு அடிமையானார்கள்: தில்லி முகலாயச் சுல்தான்கள் தமிழ் மண்ணைத் தொட்ட நாள் தொட்டு அராபிய, உருது இந்துத்தானி, பாரசீக மொழிகளுக்கு அடிமை-

* நூல்: "தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்". ஆசிரியர்: க. ப. அறவாணன்.

யாளுர்கள்; 1498-இல் கள்ளிக் கோட்டையில் வாசுகோடக்காமா வந்து இறங்கிய காலந்தொட்டுப் போர்த்துக்கீசிய மொழிக்கு அடிமையானுர்கள். பிரான்சுக்காரர்கள் தென்னிந்தியாவைப் பிடித்து ஆட்சி செய்தபோது தமிழர்கள் பிரான்சு மொழிக்கு அடிமையானுர்கள். கடந்த 300 ஆண்டுகளுக்கு முன்னர் பத்தாயிரம் கற்கள் பயணம் செய்து தென்னகம் வந்த ஆங்கிலேயர் தம் ஆங்கிலமொழிக்கு தமிழர்கள் நிலைக்க அடிமையானுர்கள். 1947-க்குப் பிறகு உரிமை பெற்றும் மொழி உரிமை பெரு நிலையில், புதிய வரவான வடஇந்தியரின் இந்திமொழிக்குச் சற்றும் வெட்கம், மானம், கூச்சம் எதுவுமில்லாமல் அடிமையாக வேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். ஆக, அன்றுதொட்டு இன்றுவரை கடந்த காலங்களைத் தொகுத்துப் பார்த்தால், தமிழர்கள் காலந்தோறும் ஏதேனும் ஒரு மொழிக்கு அடிமையாக இருப்பதையே குணமாகக் கொண்ட நோயாளிகள் என்பது புலப்படும்.''

இவ்வரலாற்றுப் புதைகுழியிலிருந்து தமிழினத்தை வேற்று இனங்கள் ஆண்டபோதெல்லாம் அவர்களின் மொழிகளாலும் நம் தமிழ்மொழி ஆளப்பட்டு-சிதைக்கப்பட்டுக் கலப்பு மொழியாக்கப்பட்டதை நாம் அறியலாம். நம் மொழியும், விழியும், மனமும், அறிவும்—ஏன் எல்லாமே இன்றுவரை குருடாக்கப்பட்டுத் திசைமாற்றப்பட்டிருக்கின்றது. இந்த வரலாற்று உண்மைகளைப் புரிந்துகொண்டுதான் நம் மொழி இனக்காவலர்: பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள், தமிழின விடுதலைக்குத் 'தனித் தமிழை வலியுறுத்தி, அதன்மூலம் ஓர் அரசியல் உள்ளடக்கத்தைத் தந்துள்ளார்கள். இந்தத் தமிழினத்தின் நோயை அறியாதவரெல்லாம் நோயைப் போக்கக் கிளம்பி இருப்பதாலேயே தமிழினம் எழமுடியாமல் இன்றுவரை வீழ்ந்து கிடக்கிறது.

தமிழ்த் தேசிய இனம் குமுகப் பொருளியல் அரசியல் களங்களில் பல வகுப்புகளாக (வர்க்கம்) பிரிந்திருக்கின்ற இன்றைய கால கட்டத்தில், இங்கு ஆளுமை நிலையிலுள்ள தமிழரல்லாதாரும் தமிழினத்தைச் சேர்ந்த சில வகுப்பினரும், இடைத் தரகராக நின்று வேற்று இனங்களின் மொழியையும் பண்பாட்டையும் தொடர்ந்து புகுத்துகின்றனர். ஆகவே 'தமிழ்மொழி வழிக் கல்வி' உரிமையைத் தமிழினத்தின் முன்னேற்றத்திற்கான விடுதலைக்கான முதல் உரிமையாகவே நாம் கருதுகின்ருேம். மொழி உரிமையும் இன உரிமையும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதது. (தமிழ் மொழியின் ஆய்வு நிலையைத் தவிர்த்து) மற்ற நிலைகளில் மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் மொழி, இலக்கியத்தைப் பற்றி மட்டும் புகழ்ந்து கொண்டிருக்கின்ற பட்டந்தாங்கிகளும், அவ்வாறே நம் மொழியை விட்டுவிட்டுப் போலி அரசியல் கட்சிகளின் தலைமைகள் மக்களின் வாழ்வுரிமையை மீட்பதாக வாய்வீரம் பேசுவதும் தங்களின் வகுப்பு நலனைக் காத்துக் கொள்வதற்கானதே.

Scanned with CamScanner

நாம் பெறுகின்ற அடிமைக் கல்வி:-

மேலும் தமிழகத்தில் ஆரியர்களின் வருகைக்குப் பின் அரசர்கள் அவர்களின் பொய்ம்மைகளுக்கு அடிபணிந்த பின், படிப்படியாக மக்களுக்குப் பொதுக்கல்வி மறுக்கப்பட்டு, ஒரு சிலர்க்கு மட்டும் மதவழிக் கல்வி அளிக்கப்பட்டது. ஆரியத்தின் நச்சுவேர்கள் இங்கு ஆழமாக ஊன்றப்பட்டு விட்டதாலும், ஆங்கிலேயர்கள் தங்கள் சுரண்டலுக்காக உருவாக்கப்பட்ட முதலாளிய அதிகார வகுப்பு ஆங்கில வழிக் கல்வியே இன்னும் இந்த இந்திய தமிழக அரசுகளால் புகுத்தப்படுவதாலும், தமிழின மக்கள் ஒவ்வொரு துறையிலும் தங்கள் தனித்தன்மையை உணர வழி இல்லாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று நாம் பெறுகின்ற கல்விமுறை மாந்தனுக்கு இயற்கையாகவுள்ள அன்பு, இரக்கம் போன்ற மாந்தநேயத் தன்மையை வளர்ப்பதில்லை. மாறாக ஒருவரையொருவர் அடிமைகொள்ளும், சுரண்டும், ஏமாற்றும் முதலாளியக் கல்விதான் நமக்கு அளிக்கப் படுகிறது.

தங்களைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கைத் துயரத்தைத் தெரிந்து கொள்ளாத, தந்நல நோக்குள்ள தனிச் சிந்தனையை வளர்க்காத, புரியாமல் மனப்பாடம் செய்யும் அடிமைக் கல்வியைத்தான் நாம் பெறுகின்றோம்.

தமிழ் வழிக் கல்வியின் சிறப்பு :-

தாய்மொழி வழியான தமிழ்மொழி வழிக் கல்வி அளிப்பதின் மூலமே. நமக்கு மொழிப்பற்றும், அம்மொழியைப் பேசுகின்ற மக்களின் இனப்பற்றும், பொதுவான மாந்தநேயப் பற்றும் உருவாகும். தாய்மொழியில் பாடங்களைப் புரிந்து படிக்கும்போதுதான் தெளிவான அறிவியல் சிந்தனையும், புதிய கருத்துகளையும் தேவையான பொருள்களையும் ஆக்கும் தனிச் சிந்தனையும் உருவாகும்.

பாடங்களைப் புரியாமல் படிக்கும்போது மாணவர்களுக்கு மனச்சோர்வும், அதனால் படிப்பதில் வெறுப்பும் ஏற்பட்டுத் தனக்கும் தன் குடும்பத்திற்கும் தான் சார்ந்த குமுகத்திற்கும் சுமையாக மாறி விடுகின்றான்.

தமிழினம் திசை மாற்றப்பட்ட நிலை:-

தமிழ்நாட்டின் மக்களுடைய உண்மையான வரலாறு, தொழில்கள், குமுகச்சிக்கல் போன்றவை முறையாகக் கற்பிக்கப் படாமல், நம் வாழ்க்கைக்குப் பயன்படாத - அறிவியலுக்கு மாறான மதவியல் கருத்துகளும் மூடத்தனமான புராண இதிகாசக் குப்பைகளும் கல்வியின் பெயரால் புகுத்தப்படுகின்றன.

இவ்வுலகில் மகிழ்ச்சியோடு வாழ்வதைப் பற்றி எண்ணாமல் துறக்கத்தில் (சொர்க்கத்தில்) நல்ல வாழ்க்கை கிடைக்க வேண்டுமென்று மனம் வருந்திக் கொண்டிருப்பார் சிலர்;

தன்னோடு உழைப்பவனை—தன் மொழியைப் பேசுபவனை
நேசிக்காமல், எதிரியாகக் கருதிக் கொண்டு எங்கோ இருப்பவர்
களோடு இணைவதற்குத் துடித்துக் கொண்டிருப்பான்; உலகியம்
பேசிக்கொண்டு இருப்பான். இந்த வகையான மனச் சிதைவு-
களை உருவாக்குவதற்கான கல்வியையும் அரசியலையுமே நம்
தமிழின எதிரிகள் இதுவரை நமக்கு அளித்திருக்கின்றனர்.

இன்று தமிழ்நாட்டில் சாதி, மதம், கட்சி போன்ற வட்டத்-
திற்குள்ளேயே மக்கள் தேக்கி வைக்கப்பட்டும், வெறியூட்டப்
பட்டும் உள்ளார்கள். இயல்பாக இருக்கக்கூடிய தமிழின உணர்வு
திசைமாற்றப்பட்டுள்ளது.

இன்றைய தமிழ்நாட்டின் கல்விச் சூழல்:-

இன்று தமிழ்நாட்டில் கல்வி ஒரு வணிகமாகி, அதில் பண-
முள்ளவன் படிக்காமலேயே பட்டமும் வேலையும் பெற்று விடு-
கின்றான். சிற்றூர்ப்புற ஏழைமக்கள் அடிப்படைக் கல்வி பெறு-
வதைக் கூடத் தடுக்கும் பொருட்டுத் தொடக்கக் கல்வி புறக்-
கணிக்கப்படுகிறது. எங்கும் மழலையர் பள்ளி முதல் பல்கலைக்
கழகங்கள் வரை ஆங்கில வழிக் கல்வியை அளிப்பதின் மூலம்
தமிழகத்தின் இளைய தலைமுறையையே நஞ்சாக்குகின்றனர்.
அனைத்து நிலைகளிலும் அவர்களைச் சிதைத்துத் தமிழினத்திற்கு
எதிராக மாற்றுகின்றனர். படிக்கவும் முடியாமல் வேலையும் பெற
முடியாமல் தமிழினத்தின் ஏழை மக்கள் தவிக்கின்றனர்.

நம் தமிழக மக்களின் முழக்கமும் செயலும்:-

1. தமிழக மக்கள் அனைத்து நிலைகளிலும் முன்னேற-முதலில்
தாய்மொழி வழியான தமிழ்மொழி வழிக் கல்வியை மழலையர்
பள்ளி முதல் பல்கலைக் கழகப் படிப்புவரை கட்டாயமாக்க
வேண்டும்.

2. மேலும் தமிழ்நாட்டில் தமிழ்மொழி வழிப் படித்த-
வர்க்கே—தமிழக மற்றும் நடுவண் அரசுத் துறைகளிலும் தனி-
யார் துறைகளிலும் வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க
வேண்டுமென்பதைத் தமிழக அரசு சட்டமாக்க வேண்டும்.

3. தொடக்கப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம்
வகுப்பு வரை பெண் ஆசிரியர்களையே அமர்த்த வேண்டும்.
போதிய இடவசதியும் கல்விக்கான துணைக் கருவிகளும், குறிப்-
பிட்ட மாணவர்களுக்குத் தேவையான ஆசிரியர்களும் அளிக்கப்-
பட வேண்டும். இன்றுள்ள ஆசிரியர்களுக்கெல்லாம் கட்டாய-
மாக மறு பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

4. இன்றுள்ள உலக அரசியல் சூழ்நிலையில் ஐந்தாம் வகுப்-
புக்கு மேல் ஆங்கிலத்தை கட்டாயமில்லாத ஒரு மொழிப் பாட-
மாக மட்டும் வைக்கலாம்.

5. தமிழ் நாட்டிலுள்ள கோவில்கள், பள்ளிவாசல்கள்,
தேவக் கோயில்கள் அனைத்திலும் தமிழே வழிபாட்டு மொழியாக
இருக்க வேண்டும்.

நாடகம் :

# காளாம்பி

**நாடக ஆக்கம்: அதியமான்**

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாவியக் கொத்தில் 2—ஆவது பாவியம்)

முன்னுரை :

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியக் கொத்தின் இரண்டாம் கதையே காளாம்பி. இது குமுகாயச் சூழலில் ஏற்படும் மாந்தவியல் நிகழ்ச்சிகளில், மனவியல் நிகழ்வுகளை ஆழமாக விளக்கிக் காட்டும் ஓர் அருமையான மனப்புயலடக்கம்.

'ஒரு கொடி படர்வதற்கு அண்மையில் இருந்த ஒரு மரத்தைக் கொழு கொம்பாகப் பயன்படுத்துகிறது. கொடியின் உயிர் வாழ்வைச் சற்றும் எண்ணாது மரத்தை வெட்டி விட்டு, அக்கொடி படர வேறொரு மரத்தை வெட்டியவனே அமர்த்தி விடுகிறான்; அதில் படர்ந்து உலகம் உய்ய ஆக்கப் பணியைச் செய்து கொண்டிருப்பது போல, இக்காதையில் வரும் தலைவி வாழ்கிறாள். மாந்தர்களுடைய அறிவின் முகாமையான உணர்வின் உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன. இந்த மெய்ம்மைப் பொருளின் கருத்தைப் பாவலரேறு அவர்கள் தம்முடைய அறிவியல் புலமையால் தெளிவாகக் காட்டுகிறார்கள்.

பாவலரேறு அவர்களின் எழுத்துக்குவியல்களை ஆழமாகக் கற்றாலொழிய அம்மெய்ம்மையைப் புரிந்து கொள்ள இயலாது; அந்த மெய்ம்மையை அறிந்து கொள்ள இந்நாடக ஆக்கம் பயன்படுமென நான் நம்புகிறேன்.

களவு, கற்பு என்ற இருவாழ்க்கை நெறிகளும் தமிழர்களுக்கு உயிர் போன்றவை. களவு என்பது எளிதாக நிகழ்ந்து விடுகிறது. ஆனால், கற்பு என்பதைக் காப்பதென்பதற்குச் சரியான விளக்கங்கள் இல்லாமையால் பல திணறல்கள் ஏற்பட்டு வந்தன; ஏனென்றால் கற்பு என்ற தமிழர் நெறியால் பெண்களைக் குற்றப்படுத்தியவர்களே மிகுதி. அதை வழிபடுத்தியவர்களில் தந்தை பெரியார் அவர்கள் முகாமையானவர். காட்டாகக் கைம் பெண்ணுக்கு மறுமணஞ் செய்வித்தல். இது குமுகாயத்தை

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

6. தமிழ் நாட்டிலுள்ள நடுவண் அரசுத் துறை நிறுவனங்களும் அலுவல்களும் தமிழிலேயே நடக்கப் பெற வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களே, உழவர்களே, தொழிலாளர்களே, இளைஞர்களே, மாணவர்களே, மாணவிகளே...

நாம் ஒவ்வொரு துறையிலும் முன்னேறவும், அம்முன்னேற்றிற்கான சிந்தனையைப் பெறவும், உரிமை உணர்ச்சியைத் தூண்டவும் தமிழ்மொழி வழிக் கல்வியே தேவை என்பதை உணர்வோம்! ஒன்றுபட்டுச் செயல்படுவோம்! வெற்றி பெறுவோம்!

Scanned with CamScanner

நிலைகளை எதிர்த்து மட்டுமன்று, கைம் பெண்ணின் மனக்குமுறல் உணர்ந்து செய்த, ஒரு பெரிய செயலாகும். காளாம்பியில் வரும் தலைவியின் குமுறலை அடக்கி ஆசிரியர் நெறிப்படுத்துகிறார். தன்னுடைய இளமையில் ஒருவனைக் காதலித்துக் குமுகாயத் தாக்கத்தால் வேறு ஓர் ஆணைத் திருமணஞ் செய்து ஒரு மகவைப் பெற்றபின், முதற் காதலனை எதிர்பாராமல் சந்திக்கிறாள். அப்போது தோன்றிய உள்ளக் கிளர்ச்சிகளுக்கு அவளும், அவனும் ஆளாகாமல் போய் விடுகின்றனர், கிளர்ச்சியின் புறச்செயல்கள் நடந்திருந்தால் அஃதாவது இருவரும் பேசி இருந்தால், கணவன் ஐயம் வளர்ந்து வாழ்க்கை சீரழிந்து இருக்கும்.

அந்த நுணுக்கத்தை, மெய்ம்மைப் பொருளை பாவலரேறு அவர்கள் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள்.

மனவியல் நுணுக்கங்கள் பாவியத்தைப் படிக்கப் படிக்கத் தெளிவாகும். அந்தத் தெளிவை விளக்க இந்நாடகம் முயலுகிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

பாவலரேறு அவர்கள் மிக எச்சரிக்கையாக உணர்ச்சிகளை அடக்கி வழிப்படுத்துகிறார்கள்.

ஆசிரியர் அப்பாவியத்தில் உள்ள உணர்வுகளை காட்டும் திறத்தைக் கவனியுங்கள்.

"அவளுளம் உள்ளிய ஆயிரஞ் சொற்களில்
தவறியுமொரு சொல் தந்நா வுரையாது"

காட்சி—1

உறுப்பினர் : குழந்தை, தாய், கணவன், பயணிகள், பெண் பயணி, ஆண்பயணி.

இடம் : தொடர் வண்டி உள்ளறைப் பிரிவு.

காலம் : காலை

(தொடர் வண்டி வந்து நிற்கிறது. குழந்தையுடன் தாயும், கணவனும் வண்டிக்குள் முதலில் இருக்கை இடம் பிடித்துத் தன் குழந்தையைத் தாய் உறங்க வைத்துக் கொண்டு, தானும் படுத்துக் கொள்கிறாள், மற்றவர்கள் அதில் இருக்க இடமில்லை. கணவன் எதிரில் அமர்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறார். ஒரு பெண் உள்ளே வருகிறாள்.)

பெ.பய : (உள்ளே வந்து குழந்தையுடன் உறங்கும் தாயைக் கையால் தட்டி எழுப்பி) இந்தாம்மா, எழுந்து பிள்ளையை மடியில் உறங்க வை.

தாய் : (படுத்துக் கொண்டே தலையை நிமிர்த்தி) குழந்தை உறங்குகிறது. (எதிர்ப் பக்க இருக்கையைக் காட்டி) அப்படி உட்கார். இன்னும் சிறிது நேரத்தில் குழந்தை எழுந்து விடும்.

பெ.பய : அது மட்டும், இப்படிப் படுத்திருப்பாயோ? நன்றாய் இருக்கிறது நீ சொல்லுவது. ஏம்மா, நீ மட்டுந்தான் பயணச்

சீட்டு (Ticket) வாங்கி இருக்கிறீயோ? இந்த இருக்கையில் ஆறு பேர் அமர வேண்டும். தெரியுமா? நீ மட்டும் பிள்ளையைப் போட்டு முழு உரிமையோடு படுத்துக் கொண்டாயே, எவ்வளவு பேர் நின்று கொண்டிருக்கிறோம் பார்த்தால் தெரியவில்லை; 'ங்' எழுந்து பிள்ளையை மடியில் தூக்கி வை.

தாய் : (அவள் மட்டும் எழுந்து அமர்ந்து) உட்காருங்க, அம்மா உட்காருங்க.

பெ.பய : பிள்ளையைக் கையில் எடு.

தாய் : அ'து உறங்குகிறதே! தூக்கினால் விழித்துக் கொள்ளும்;

பெ.பய : விழித்துக் கொள்ளுமா? அது வரைக்கும் நாங்கள் எல்லாரும் நின்று கொண்டு இருக்க வேண்டுமா, என்ன?

தாய் : பிள்ளை படுத்திருக்கும் இடந் தவிர மிச்ச இடத்தில் உட்காருங்களே.

பெ.பய : குழந்தைதான் நான்கு பேர் அமரும் இடத்தில் படுத்து உறங்குகிறதே.

தாய் : கொஞ்ச நேரத்துக்குத்தானே;

பெ.பய : எங்களுடைய கால்கள் என்ன இரும்பா? எவ்வளவு நேரம் நிற்க முடியும்? குழந்தையைத் தூக்கும்மா;

ஆண்.பய: சரி. சரி. குழந்தை உறங்குகிறதல்லவா? மிச்ச இடத்தில் அமர்ந்து கொள்ளலாம்; கொஞ்ச நேரத்திற்குப் பிறகு குழந்தை விழித்துக் கொண்டதும், எல்லாருமே உட்காரலாம்.

பெ.பய : (ஆண் பயணியைப் பார்த்து) அட! நீ சும்மா இடய்யா? பெரிய ஞாயம் பேச வந்துட்டார் ஞாயம். எத்தனை பேர் நின்று கொண்டிருக்கிறோம்; சிந்திக்க வேண்டாமா?

ஆண்.பய : ஆமாம் ஆமாம்! இதற்கெல்லாம் மிகுதியாகச் சிந்திக்க வேண்டுமா? பெண்கள் பெண்களுக்காக இரங்குவதே கிடையாது. பிள்ளைக்காகத்தானே அந்த அம்மா இடங்கேட்கிறார்கள். அமரத்தான் இடம் இருக்கிறதே அதில் அமர்ந்தாலென்ன?

பெ.பய : நான் மட்டுமா நிற்கிறேன்; எத்தனை பேர் நிற்கிறார்கள்.

ஆண்.பய : எல்லாரும்மா கேட்கிறார்கள்; நீ மட்டுந்தானே கேட்கிறாய்?

பெ.பய : பெண்கள் உரிமைகளை எல்லாருமா கேட்டார்கள்; ஒருவர் மட்டுந்தான் கேட்டார்; ஈ.வெ.இரா;

ஆண்.பய : அப்படிவா; பெண்கள் அடிமைகளாக இருத்தல் கூடாது என்பதைப் பெண்கள் கேட்கவில்லை; ஆண்கள்தாம் சுட்டிக் கேட்டார்கள்; இன்னும் பெண்கள் ஆண்களிடம் அடிமையாக இருக்கத்தானே விரும்புகிறார்கள்;

பெ.பய : நீங்கள் சொல்லுவது போல பெண்கள் அடிமையாக வாழ விரும்பவில்லை. ஆண்கள் பெண்களை அடக்கி ஆளுமை செய்கிறார்கள். அதனால்தான் அடிமை வாழ்விலிருந்து மீளமுடியவில்லை.

ஆண்.பய : இந்தாம்மா, கேள்! சொல்லுகிறேன். அதாவது மணக்கொடை கேட்பது. (வரதட்சணை) சீர், சீராட்டுகளைக் குறைக்காமல் கூட்டிக் கேட்டுத் தொல்லைப்படுத்தல் எல்லாம் யார்? ஆண்களா? பெண்கள் தானே! மாமியார்களும், கணவனோடு உடன் பிறந்த பெண்களுந்தாம் வீட்டுக்கு வந்த பெண்களை அழுத்தி ஆண்களின் ஆரவார வாழ்க்கைக்குப் பணம் கொண்டு வர வன்கொலை செய்கிறீர்கள். இந்தா, கேளு! வாழ வந்த பெண்ணைக் கொன்றுவிட்டு அடுப்பு வெடித்துச் செத்தாள் என்று அடுக்குப் புளுகைக் கூறித் தப்பித்துக் கொள்வது பெண்களே. எந்த அடுப்பாவது மாமியாளைப் பார்த்து வெடிக்கிறதா? மருமகளைப் பார்த்துத்தானே வெடிக்கிறது.

பெ.பய : கேளய்யா. என் மருமகள் ஒருத்திக்கு வைரக் கழுத்தணி போடுவதாகப் பேச்சு. ஆனால் பொதுவான (சாதாரண) கல்லணியைப் போட்டு விட்டார்கள். இதைக் கேட்கத்தானே வேண்டும்; என் மகன் இருக்கானே பிழைக்கத் தெரியாதவன். பொதுக் கல்அணியே போதும் என்று என் பேச்சைக் கேட்பதில்லை. மனைவி கிடைத்தால் போதும் என்று இருக்கிறான் மட்டிப்பயல்.

ஆண்.பய : பார்த்தாயா? ஆண்போதும் என்கிறான். நீயும் பெண், உன் மருமகளும் பெண். அவளுக்காக பரிந்து பேசுவது உன் மகன். அவன் ஆண், நீ பெண். இந்த அறையில் எத்தனை ஆண்கள் இருக்கிறோம். நாங்கள் ஏதேனும் பேசுகிறோமா? நீ தானே அந்தப் பெண்ணோடு வழக்காடுகிறாய்.

பெண்.பய: சரி. (தாய்ப் பெண்ணைப் பார்த்து) கொஞ்சம் குழந்தையை விலக்கிப் போடு. நான் இந்தப் பக்கம் அமர்ந்து கொள்கிறேன். (அமர்ந்து கொண்டாள்)

தாய் : இதற்கென்ன வழக்கு நான் குழந்தையை எடுத்துக் கொள்கிறேன். (கையால் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்து எதிரில் இருந்த ஆணைப் பார்த்து உணர்ச்சி பெறுகிறான்.)

(தாயாக இருக்கும் பெண்ணை எதிரில் இருந்த ஆண் ஒருவன் பார்க்கிறான். உணர்ச்சி பெறுகிறான். பழைய நிகழ்ச்சிகளை எண்ணி ஏங்குகிறார்கள். பழைய நிகழ்ச்சிகள்.

(திரை)

(காட்சி மாற்றம்)

# செய்திகள்

## 1. நவோதயாப் பள்ளிகளும், வேதாகமக் கல்லூரிகளும் தேவையா? —கருத்தரங்கம்!

கடந்த 12-5-92 ஆம் நாள், சென்னை 17, வடக்குபோக் சாலையிலுள்ள வசந்த மகாலில், மாலை 6 மணியளவில், நவோதயாப் பள்ளிகளும், வேதாகமக் கல்லூரிகளும் தேவையா என்பது பற்றிய கருத்தரங்கம், மன்றங்கள் ஒன்றிய பேரவையால் கூட்டப் பெற்றது.

கருத்தரங்கிற்கு முனைவர் மா. நன்னன் தலைமை தாங்கினார். பெரும் பாவலர்கோ வா. மு. சேதுராமன் வரவேற்புரை யாற்றினார். பாவலரேறு பெருஞ்சித்திரனார், முனைவர் சாலை இளந்திரையன் இருவரும் முன்னிலையிருந்து இறுதியுரையாற்றினர். பாச்செம்மல் அரு. கோபாலன் தொடக்கவுரையாற்றினார். திருவாளர்கள், பாவலர் இன்குலாப், புலவர் சுந்தரராசன், புலவர் கோ. தேவராசன்' அரணமுறுவல், புல்வர் வெள்ளைச்சாமி வெண்பா வேந்தர் புரட்சிதாசன், உவமைப் பாவலர் சுரதா, பெரும் புலவர் முருகேசனார் ஆகியோர் வேதாகமக் கல்லூரியும், நவோதயாப் பள்ளிகளும் தேவையில்லை என்று கருத்தறிவித்து விரிவுரையாற்றினர். இரவு 9 மணிக்கு நிகழ்ச்சி நிறைவுற்றது.

## 2. தமிழர் கல்விப் பாதுகாப்பு மாநாடு—சென்னை.

கடந்த 17-5-92 ஞாயிறு, சென்னை. 2, தேவநேயப் பாவாணர் நிகழ்ச்சி அரங்கில், தமிழர் கல்விப் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. காலை அரங்கம் நவோதயா எதிர்ப்பு அரங்கமாக நடைபெற்றது. அந்த அரங்கத்திற்குத் தமிழகத் தமிழாசிரியர் கழக அமைப்பாளர் புல்வர் கி. த. பச்சையப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். புலவர் த. சுந்தரராசன் (தலைநகர் தமிழ்ச் சங்கம்) வரவேற்புரையாற்றினார். தமிழ்நாட்டில் நவோதயாப் பள்ளிகளை அரசு தொடங்குவதைக் கண்டித்தும் எதிர்த்தும், திருவாளர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா. சாலினி, இளந்திரையன் (அறிவியக்கப் பேரவை), பாவலர் இன்குலாப், மா. பொழிலன் (ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி), உதயை மு. வீரையன் (தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம்). விடுதலை (விடுதலைக் குயில்கள்) ஆகியோர் கருத்துரையாற்றினர். திரு. நெல்லை இராமச்சந்திரன் நன்றியுரையுடன் பகல் 1 மணியளவில் காலை நிகழ்ச்சி நிறைவுற்றது.

மாநாட்டின் மாலை நிகழ்ச்சியாக வேதாகமக் கல்லூரிகள் எதிர்ப்பு அரங்கம் பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெற்றது. அரங்கத்திற்குப் புலவர், த. சுந்தரராசன் தலைமை தாங்கினார், புலவர் சாத்தன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாட்டில்

அரசு தொடங்கவிருக்கும் வேதாகமக் கல்லூரியைக் கண்டித்தும், எதிர்த்தும், திருவாளர்கள் பேரா. சாலை இளந்திரையன், பேரா. பா. கல்யாணி(மக்கள் கல்வி இயக்கம்), வழக்கறிஞர் கோவி, இராமலிங்கம்"(மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), கதிரவன் (மூற்போக்கு மாணவர் சங்கம்), புலவர் முத்து எத்திராசன் (பாவேந்தர் பாசறை), புலவர். பி.சி. கணேசன் (மாநகராட்சித் தமிழாசிரியர் பேரவை) ஆகியோர் கருத்துரையாற்றினர்.

மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக மாலை 5 மணி அளவில் ஈழ மாணவர் கல்வி அரங்கம் நடைபெற்றது. அரங்கத்திற்கு ந. அரணமுறுவல் (தமிழ் வழிக் கல்வி இயக்கம்)தலைமை தாங்கினார். தி இரா. கோவர்தன் வரவேற்புரையாற்றினார். இந்தியாவில் திபெத்திய, ஆப்கானித்தான, பாலத்தீனிய, ஆப்பிரிக்க ஏதிலிகள் எல்லாம், நம்முடைய வரிப்பணத்தில், இங்கு வந்து தங்கிக் கல்வி கற்றுச் செல்லும்பொழுது, ஈழத்தமிழ் ஏதிலியர்க்கு மட்டும் அந்த வசதி, வாய்ப்புகளை மாநில அரசும் வடநாட்டுத் தில்லியரசும் மறுப்பதேன் என்றும், அந்த வசதி வாய்ப்புகளைத் தர வேண்டும் என்றும் கோரி, திருவாளர்கள் தலித். இரா. எழில்மலை (பாட்டாளி மக்கள் கட்சி), பெ. மணியரசன், (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி) பேரா. சுரசுவதி (அன்னையர் முன்னணி), அரு. கோபாலன், கண்ணன் திலீபன் மன்றம்) முதலியோர் உரையாற்றினர். இறுதியில் புலவர் வெற்றியழகன் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## 3. புரட்சிப் பாவேந்தர் நூற்றாண்டு நிறைவுவிழா: கம்பன் கலையரங்கம், புதுச்சேரி:

கடந்த 23-5-92 காரி மாலை, புதுச்சேரி, கம்பன் கலையரங்கத்தில், புரட்சிப் பாவேந்தர் நூற்றாண்டு நிறைவு விழா, புதுவை இனமானத்தந்தை திரு. மூர்த்தி ஐயா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. எ.சிவானந்தம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட, திரு. விழுப்பரையன் வரவேற்புரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திருவாளர்கள் சொல்லாய்வறிஞர் ப. அருளி, பாவலர் சித்தன், அ. நக்கீரன், மாலதிகலிவரதன் ஆகியோர் பாவேந்தரைப் பற்றிப் பல கோணங்களிலும் கருத்துரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் நெடிய நிறைவுரையாற்றினார். இறுதியில் திரு. சீனு தமிழ்மணி நன்றியுரைக்குப்பின் விழா இனிது நிறைவுற்றது.

விழா முடிவுற்றதும், அரங்கத்தின் முகப்பில் விற்றுக் கொண்டிருந்த பாவலரேறு அவர்களை ஆசிரியராகக் கொண்ட தமிழ்நிலம் ஏட்டில் தமிழீழ விடுதலை மறத்தி தாணு பற்றிய

(தொடர்ச்சி 32-ஆம் பக்கம்)

# அறிவியக்கப் பேரவையின் சார்பில்
## கோவையில் நடைபெற்ற வளர்தமிழ் மாநாட்டின்
# தீர்மானங்கள்

(கடந்த 22-8-92—இல் கோவையில், இம்மாநாடு, அறிஞர் சாலையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழகமெங்கிருந்தும் அறிஞர்கள் பலர் அதில் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இவை.)

தீர்மானங்களுக்கு ஒரு விளக்கம்: நாட்டை அடிமைப்படுத்தித் தன்னுடைய ஆங்கில மொழியை நம் மீதெல்லாம் திணித்துக் கொண்டிருந்த மாற்றான் ஒழிந்த பிறகு, இங்கே 45ஆண்டுக் காலமாக நம்முடையவர்களின் ஆட்சி நடைபெற்று இருக்கிறது. மாறிமாறி வந்த பல கட்சிகளில் எந்த ஒரு கட்சியின் ஆட்சியிலும் நம்முடைய தாய்த்தமிழ் அதற்குரிய இடத்தையும் தலைமையையும் பெறவில்லை. பொது மன்றங்களும் தனிப்பட்ட அறிஞர்களும் எத்தனையோ முறை எடுத்துச் சொன்ன பிறகும் தமிழகத்தில் தமிழ்மொழி தலைமை பெறாதது மட்டுமன்று—ஒரு தமிழ்க் குழந்தை தமிழையே படிக்காமல் பட்டங்கள் பெற்றுவிடலாம் என்கிற இழிநிலையே இன்னமும் நீடிக்கிறது! ஆகவே, கடுகளவுதானும் தமிழ்ப் பொறுப்புணர்ச்சி இல்லாத அரசை நம்பி இன்னமும் கோரிக்கை விட்டுக் கொண்டு இருக்காமல்,—அரசைப் புறக்கணித்து விட்டு,—தமிழ்ப் பொதுமக்களை நோக்கியே இந்த மாநாடு தன்னுடைய தீர்மானங்களை நிறைவேற்ற விரும்புகிறது.

### தீர்மானம்—1

தமிழகத்தில் உள்ள தமிழ்ப்பற்றாளர்களும் தமிழ்இன உணர்வாளர்களும் நூற்றுக்கணக்கான தமிழ் அமைப்புகளை உருவாக்கி நடத்தி வருகிறார்கள். இருப்பினும் இவை ஒன்றுபட்ட ஓர் உறுதியான அமைப்பாக இல்லாததால் இவற்றின் தமிழ்க் கோரிக்கைகளுக்கு நம்முடைய அரசுகள் செவிசாய்ப்பதே இல்லை. ஆகவே இந்த அமைப்புகள் அனைத்தும்,-''தமிழ் மொழியே பாடமொழி, தமிழ்மொழியே அறமன்றமொழி, தமிழ்மொழியே ஆட்சிமொழி. தமிழ் மூலம் படித்தவர்களுக்கே தமிழகத்தில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை'' என்னும் கோரிக்கைகளை மட்டும் முன் வைத்து ஒன்றுபட வேண்டும் என்றும், ஒன்றுபட்ட அந்தப் பெரிய அமைப்பின் மூலம் அரசையே பணிய வைக்கக் கூடிய தமிழ்ப் போராட்டங்களில் ஈடுபட வேண்டும் என்றும் இந்த அமைப்புகள் அனைத்தையும் வளர்தமிழ் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது. இப்படி ஒன்றுபடும் திசையில் சில அமைப்புகளாவது உறுதி காட்டினால், அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஒரு தமிழ்ப் பெரும் போராட்டத்துக்கு அணியம் செய்யும் பணியை முன்நின்று நடத்துவதாக, அறிவியக்கப்

பேரவை, இந்த மாநாட்டின் மூலம் தமிழ் உலகுக்கு உறுதியளிக்கிறது.

### தீர்மானம்—2

3000/40000 ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் வாழ்வோடு வளர்ந்து செழித்துள்ள பண்பட்ட மொழியாகிய நம் தமிழ்மொழி 'ஆட்சி நடத்த உதவாது, அறம் (நீதி) வழங்க உதவாது, அறிவியல் படிக்க உதவாது' என்று பழித்துப் பேசித் திரியும் படிப்பாளிகளையும் அரசியல்காரர்களையும் அங்கங்கேயே தடுத்துக் கண்டிக்கவும் தண்டிக்கவும் தமிழ் வீறுடைய நன்மக்கள் எழுந்து நிற்க வேண்டும் என்றும், தாய்மொழியைப் பழிப்பவனைக் கண்டிக்காத செயலின்மையை 'நாகரிகம்' என்ற பெயரில் தமிழ் அன்பர்கள் தொடரக் கூடாது என்றும் நாடெங்கும் உள்ள தன்மானத் தமிழர்களை வளர்தமிழ் மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறது.

---

(30-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல் ஒன்று வெளிவந்ததால், அவ்விதழ்களையும் நூல்களையும் விற்பனை செய்து கொண்டிருந்தவர்களான நற்றேவனையும் இன்னொரு தோழரையும் உள்படப் பாவலரேறு, அருளி, மூர்த்தி ஐயா ஆகியவர்களைப் புதுவை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அழைப்பதாகக் காவலர் வந்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து ஏராளமான அன்பர்கள் காவல் நிலையத்தின்முன் முற்றுகையிடத் தொடங்கினர். காவல் நிலையத்தில் தலைவர்கள் ஏறத்தாழ ஒன்றரை மணி நேர உசாவலுக்குப் பின்னர் வழக்குப் பதிவு செய்வதாகக் கூறி விடுவிப்புச் செய்தனர், பின்னர் வழக்கும் பதிவு செய்தனர்.

---

## பெருஞ்சித்திரனாரின் திருக்குறள் மெய்ப்பொருள் உரைச் சுருக்கம்

### அன்பர்கள் கவனிக்க!

கடந்த தென்மொழி இதழிலும், இவ்விதழிலும் மெய்ப்பொருள் உரைச் சுருக்க மாதிரி உரைகள் சில வெளியிடப் பெற்றுள்ளன.

அவ்வுரைகளை மேலோட்டமாகப் படிக்காமல், அன்பர்கள் தங்கள் கைகளில் உள்ள, தங்களுக்கு விருப்பமான, தாங்கள் இதுவரை சரியென்று கருதிக் கொண்டிருக்கும் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர், முதலிய பழைய உரைகாரர்களின் உரைகளையும், பிற்காலத்துப் பாவாணர் வரை வெளிவந்த உரைகளையும் எடுத்து அருகில் வைத்துக் கொண்டு, அவற்றை முதற்கண் நன்கு படித்து உள்வாங்கிக் கொண்டு, அதன்பின் இறுதியில் இவற்றைப் படிக்கவும்.

அவ்வாறு ஒப்பிட்டுப் படிப்பதில்தான் இம்மெய்ப் பொருளுரையின் மேம்பாடு அவர்களுக்கு விளங்க வரும் என்பதை அன்புடன் கூறிக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

கூறுகிறது; 'சாவா மருந்து' என்று திறக்குறளில் வரும் தொட-ருக்குச் சிலர் அமிழ்து என்று பொருள் கூறுவர்; இச்சொல்லுக்கு இங்ஙனம் பல பொருள் இருப்ப, இதற்குத் தாய்ப்பால் என்றே பொருள் கொள்வது பொருந்துமா என்பது ஆராய்தற்குரியது.

முதல்திகாரத் தலைப்பைப் பலர் 'கடவுள் வாழ்த்து' எனக் கொண்டுள்ளனர்; கடவுள் என்ற சொல் திருக்குறளில் காணப் பெறுமையின் உரையாசிரியர் சிலர் அத் தலைப்பினைப் பெயர் மாற்றி அமைத்துள்ளனர்; 'முதற்பகவுன் வழுத்து' எனப் பாவாணரும், 'இறை வாழ்த்து' எனக் கா. அப்பாதுரை-யாரும்'' 'இறைநலம்' எனப் புலவர் குழந்தையும், 'ஆதிபகவன் வாழ்த்து' என்றிருக்கலாமென வ. சுப. மாணிக்கனாரும் மாற்றி-யமைத்தது போலவே, இவ்வாசிரியரும் 'அறம் முதல் உணர்தல்' எனப் பெயர் மாற்றம் செய்துள்ளார். இங்ஙனம் ஒவ்வொரு-வரும் மாற்றிக் கொண்டே சென்றால் வரம்பின்றிப் போகும். ஆதலின், பெருவழக்கில் உள்ள 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரப் பெயரே பொருந்தும் எனலாம். கடவுள் என்ற சொல் தொல்காப்பியத்தில் பயிலுதல் நினையத்தகும். சொற்பொருளும் விளக்கங்களும் புதுமையாக இருத்தலாலும் தமிழ் மரபை அடிப்-படையாகக் கொண்டு எழுதப்பெறுதலானும் இவ்வுரை வர-வேற்கத்தகும்.

(ஆசிரியர் விளக்கம்: 'கடவுள் வாழ்த்து' என்பதற்குப் பல-ரும் பல்வேறு மாற்றுத் தலைப்புகள் தந்துள்ளமையாலேயே அது பொருத்தமில்லை என்றாகிறது. பொருந்தாத ஒரு தலைப்பு, பல தலைப்புகளுக்கு இலக்காவதாலேயே பொருந்துந் தலைப்பாகி விடாது; புதுத் தலைப்புகளில் தகுதியுடையது காலத்தால் நிலை நின்ற பின்னைச் சிக்கலிராது; கருத்து வளர்ச்சியை எவரும் தடை செய்வது இயலாதது; பெற்றோர் பெயர் இடாத பிள்ளைக்கு ஊரார் பல பெயர்கள் இட்டு அழைப்பது போல- நூலாசிரியர் இட்டிராத தலைப்புக்கு உரையாசிரியர் தம் தம் கருத்துக்கு உகந்த தலைப்பிடுதல் ஒரு வகையில் தவறில்லையாயினும் 'கடவுள் வாழ்த்து' தவிர்ந்த வேறு அதிகாரங்களுக்கு வேறு வேறு தலைப்-பிடுதல் விரும்பக் கூடாததே. மாறாகத் தவிர்க்கவும் தக்கதே; நூற்பெருமையைக் குறைக்கும் அத்தகு மாற்றங்கள் தேவையும் இன்றாம்; — ஆசிரியர்.)

O : *1509* : பாசத்திற்குரிய பெருந்தகையாளர் பாவலரேறு அவர்களுக்கு பனிமலைப்பதியன் பணிவுடன் எழுதுவது வணக்கம். தென்மொழி (சுவடி : 26 — ஓலை-8) இதழ் கண்டேன். உள்ளம் மகிழ்ந்தேன். எம் போன்ற தென்மொழி மற்றும் திருக்குறள் அன்-பர்களின் நீண்ட நாள் வேண்டுதல் நிறைவேறவுள்ளது அறிய மகிழ்ச்சியே.

• 'மெய்ப்பொருள் விளக்க உரை' நடையை இன்னும் கொஞ்சம் எளிமைப்படுத்தி வெளியிட வேண்டுகிறேன். அவ்வகையில் தென்மொழி நடையிலிருந்து சற்று இறங்கித் 'தமிழ் நிலம்' இதழ் நடைக்கோ, அல்லது இன்னும் எல்லாரும் எளிதாக அறிய உதவும் வகையில் தமிழ்ச்சிட்டு—இதழ் நடையிலோ மேற்படி மெய்ப்பொருள் உரை அமையுமானால், வளரும் இளைய தலைமுறையாம் மாணவர்கள் முதல் மற்ற எல்லாரும் பயன்படுத்த பெரும் வாய்ப்பாய் அமையும்.

மேலும் கூறவேண்டுமானால் உரைகளிலேயே பரிமேலழகர் உரை சிறந்தது என்று பலரும் கூறுவர். (கருத்து வேறுபாடும் உண்டு). இருப்பினும் அதனையே குறள்போல் இன்னொருவர் மூலம் விளக்கக் கேட்டால்தான் மாணவர்கள் நிலையில் உள்ள

Scanned with CamScanner

மற்றவர்களும் புரிந்து கொள்ள இயலும்: எண்ணிப் பாருங்கள்.

இரண்டாவது, மிக முகாமையானது...யாதெனில் குறள்களைச் சீர்பிரித்து எழுதுவது; எடுத்துக் காட்டாக வந்துள்ள குறள்களில் பொருள் கோள்முறை என்றும் 'இயல்பு' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தாலும்—குறள்களைப் படிக்கும்போதே எளிதாக அறியும் பொருட்டு அல்லது உணரும் பொருட்டு இருந்தால் என்ன? குறிப்பாக முதற் குறள்:

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு...

இதில் யாப்பு நிலையை யொட்டி எழுதுவதை விடுத்து இயல்பாகவே எழுதி அச்சிடுக.

1. வெழுத்தெல்லாம்—எழுத்தெல்லாம்
2. மாதி என்பதற்குப் பகரமாக ஆதி' என்றே இருக்கலாம்.
3. வானின்றுலகம்—வானின்று உலகம் என்று இருக்கலாம்.

கற்றதனாலாய-கற்றதனால் ஆய, தொழாஅரெனின்-தொழாஅர் எனின்; தவறாக எண்ணாமல் தக்க வகையில் கருத்தில் கொண்டு பதிப்பினை அச்சிட்டு உருவாக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

சி. கைலாசம், திருவள்ளுவர் முத்தமிழ் மன்றம், ஈரோடு-10.

ஆசிரியர் குறிப்பு: கருத்துக்கு நன்றி. ஆனால், நூலின் பொருள் உயர்ச்சிக்குத் தகுந்த உரைநடையே பொருந்துவது. வயிரத்தைத் தங்கத்தில்தான் பதிக்க வேண்டும்; வெள்ளியில் கூட பதியார். அவ்வாறு பதிப்பது வைரத்தின் பெருமைக்குக் குறைவு செய்வது போல் ஆகும்! மொழியறிவு வேறு; கருத்தறிவு வேறு. கருத்துக்கேற்ப நடை அமைவதுதான் சிறப்பு. எளிமை, எளிமை என்றுதான் தமிழை நாம் தெருநிலைக்குத் தாழ்த்தி விட்டோம். எதிரிகளும் இதையே வாய்ப்பாகக் கருதித் தமிழை நாள்தோறும் மேலும் மேலும் தாழ்த்திக் கல்லாதார் மொழியாக—தாழ்த்தப்பட்ட மொழியாக—சூத்திரர் மொழியாக—இழிவுபடுத்தி வருகிறார்கள். தமிழ் அளப்பரிய வளமும் செழுமையும் உயர்ச்சியும் கொண்டிருந்ததால்தான், மாற்றினத்தவர்களால் அதை அழிக்க முடியவில்லை. எப்பொழுதும் ஒன்றை நினைவில் வைத்திருங்கள். தமிழின் அளவுக்கு நாம் உயர்ந்து போக வேண்டுமே தவிர, நம்மின் தாழ்நிலை அளவுக்கு நம் தமிழையும் தாழ்த்தக் கூடாது; இதை எதிரிகள் பயன்படுத்திக் கொண்டுதான், தமிழை மட்டும் கலப்பாகவும், தாழ்வாகவும் ஆக்கி வருகிறார்கள். நாமும் அவ்வாறு செய்யக் கூடாது. இதனால் நம் மொழிக்கும் நமக்குந்தாம் தாழ்ச்சியே தவிர, நமக்குப் பயன் என்பதே இல்லாமல் போகும். திருக்குறள் அதன் தன்மையில் உலக நூல்கள் யாவற்றினும் உயர்ந்தது. அதைத் தமிழில் கற்பதால் கருத்தையும் உணர்கிறோம்; தமிழையும் உணர்கிறோம். உயர்ந்த கருத்துகளை அறிந்து கொள்வதைப் போலவே, மொழியின் உயர்ந்த தன்மைகளையும் அறிந்து கொள்ள வேண்டாவா? மெய்ப் பொருளுரை நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு கடின நடையன்று. அந்த நடைக்காகவே நூலைப் பலமுறை கற்க வேண்டிய இனிய, ஆற்றொழுக்கான, அழகிய தனிச் சிறப்பான தூய தமிழ்நடையில் எழுதத் திட்டமிட்டேன். தமிழின் அத்தகைய நடையை வேறு எந்த மொழியினரும் ஒரு

(தொடர்ச்சி உள்ளே 8-ஆம் பக்கம்)